குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

லர் 18] விகாரி ஆண்டு ஆடித்திங்கள் 10—8—59 [இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொடிகொளுருவர் புலியினதளர் புரிநூல் திகழ்மார்பில்
கடிகொள்கொன்றை கலந்தநீற்றர் கறைசேர்கண்டத்தர்
இடியகுரலா லிரியுமடங்கல் தொடங்குமுனைச்சாரல்
கடியவிடைமேற் கொடியொன்றுடையார் கயிலை மலையாரே.

திருச்சிற்றம்பலம்

ஆசிரியர்:- வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணை ஆசிரியர்:- வித்துவான். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

உட்பொருள்

பக்கம்

1.	சிவ ஞான போதம் (கட்டுரை)	... 525
2.	ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது மகா கைலாச யாத்திரை	... 538
3.	பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்	... 541
4.	நாவலர் காவலர்	... 546
5.	தமிழின்பின் சென்ற திருவிளையாடல்	... 550
6	மெய்ஞ்ஞானச் செல்வர்கள்	... 555
7.	நன்றி	... 558
8.	சவுந்தரியந்தாதி	... 561
9.	கம்பன் கண்ட கன்னித் தமிழ்நாடு	... 563
10.	உடல் வளர்க்கும் மூலிகைகள்	... 568
11.	திருக்கயிலாய தல விளக்கம்	... 572
12.	செய்திகள்	... 577
13.	எதிர்காலம்	... 587

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநக்ஷத்திர விழா

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நக்ஷத்திரத்தில் மாதந்தோறும் சிவதலங்களில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் திருப்பதிகங்களை அச்சிட்டு வழங்கி வருதல் போல இம்மாதம் 9—8—59 ஞாயிற்றுக்கிழமை திருநாவலூர் ஸ்ரீ நாவலேசுவரர் சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

உ

குருபாதம்

வாழ்க உலகெலாம்!

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 18 } விகாரி - ஆடி 10—8—59 { இதழ் 9

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

கட்டுரை 7

(மலர் 18, இதழ் 8, பக்கம் 481 இன் தொடர்பு)

வினு :- முற்கூறியவாறு உலகிற்கு முதற் கடவுள் உண்டு என்று இசையினும், அக் கடவுள் படைப்பு முதலிய தொழில் செய்யின், அவிகாரம் நீங்காதோ? விகாரம் உற்று ஓங்காதோ? அதனுல் அக் கடவுட்குக் கட்டு (பந்தம்) உண்டாகாதோ? (அவிகாரம் - இயற்கை. வேறுபடாமை. விகாரம் - செயற்கை. வேறுபடல்.)

விடை :- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், முதலியனவாகி வேறுபட்டு எல்லாத் தொழிலும் செய்தும், அக் காலத்துக்கு விகாரம் இல்லை. அதுபோலக் கடவுட்கும் விகாரம் இல்லை.

‘ ஞாலம் ஏழினையும் தந்து நிறுத்திப்பின் நாசம்பண்ணும்
காலமே போலக் கொள்நீ நிலைசெயல் கடவுட் கண்ணே ’

(சித்தியார் - 50)

உலகமெல்லாம் காலத்தால் தொழிற்படும். இஃது எல்லார்க்கும் ஒக்கும் அன்றே ! அக்காலம் அவற்றைத் தொழிற்படுத்துங்கால் எல்லாப் பொருட்கும் தான் ஆதாரமாகித் தனக்கு ஓர் ஆதாரம் இன்றி நிற்கின்றது. அவ்வாறே சிவசத்தியும் நிராதாரமாய் நின்றே தொழிற்படுத்துகின்றது. அதனால் கடவுட்கு விகாரம் இல்லாமையை உணர்ந்து கொள்க. ஒற்றுமைபற்றிச் சிவத்தின் இயல்பைச் சிவசத்தி மேலும் சிவசத்தியின் இயல்பைச் சிவத்தின் மேலும் கூறல் சாத்திர மரபு. கடவுள் - சிவம். கடவுட்கண் - சிவசத்தி. ‘ கடவுட்கண் ’ என்றது ஏழனுருபு ஏற்றதாகக்கொண்டு உரைத்தலும் பொருந்தும். அப்பொழுதும் ‘ பொருட்கண் ’ என்றது போல நிலைமொழியீறு திரியும். கடவுள்கண் என்றிருத்தல் வேண்டும் என்னார் கற்றறிந்தார்.

படைத்தல் முதலியவற்றைக் (1) கருவிகளைக்கொண்டு செய்வது (2) நினைப்பால்மட்டும் செய்வது என்னும் இருவகை வினைமுதலுள், பின்னது கடவுள் (சிவன்) ஆகிய வினைமுதல். அதன் செயல் கருவிகளைக்கொண்டு செய்யும் செயல் (சாதன சிருட்டி) அன்று. இஃது இவ்வாறு ஆகுக என்று எண்ணுதலாகிய கருத்தால் மட்டும் செய்யும் செயலாகும். (இது சங்கற்ப சிருட்டி). கருவிகளால் படையாது படைத்தும், காவாது காத்தும், அழிக்காதழித்தும் அம் முத்தொழில்களையும் கருத்தால் (சங்கற்பத்தால்) மட்டும் செய்வன் சிவபிரான. அதனால், அவ் வமலனுக்குக் கட்டு (பந்தம்) இல்லை. அவனுக்குக் கட்டு இல்லையாதல் எத்தன்மைத்து ? கற்ற நூலின் சொல்லும் பொருளும் கருத்தில் தோன்றுங்கால்,

உள்ளம் அச்சொல்லிலும் பொருளிலும் தொடக்குண்ணுமோ? இல்லை. அதுபோலச் சாதனம் வேண்டாது சங்கற்பத்தால் செய்யும் முதல்வன், அவனால் செய்யப்படும் படைப்பு முதலிய வற்றில் தொடக்குண்ணான்.

கனவிற் கண்டவற்றைப் புறப்பொருள்களை அறிந்து வந்த நனவுணர்வில் விளங்க அறிந்தவன், அப்பொழுது தொடக்குண்பானோ' உண்ணான். அவ்வாறே சிவனும் தனது சங்கற்பத்தால் ஆகும் தொழிலில் தான் தொடக் குண்ணான். இங்கு 'ஞானாமிர்தம்' (60) 'விந்து வவத்தை விசேடத் தேந்தை' என்பதன் பொருளையும் பின்வருவன வற்றையும் அறிதல் விளக்கம் தரும்.

சித்தியாரில், 'நிலை செயல்' இரண்டற்கும் உவமையாய் நின்ற 'காலம்' இச் சிவஞானபோத வெண்பாவில், கடவுள் 'அவிகாரி' ஆதற்கு உவமையாதல் அறிதற்பாலது. அவிகார நிலை எனக்கொண்டு யாம் இதிற் பொருத்தியுள்ளோம்.

சங்கற்ப கர்த்திருத்துவம் (1) மனோவியாபாரகர்த் திருத்துவம் (2) சந்நிதி என்று இருவகைப்படும். அவற்றுள் பிரமா முதலானோர்க்கு மனோவியாபாரகர்த்திருத்துவம் உரியது. ஈசுரகர்த்திருத்துவம் சந்நிதி மாத்திரமே. இது சிவநெறிப்பிரகாசத்தில் உள்ளது.

'முத்தொழில் செய்யும் இறைவன் உருவுடையனாதல் வேண்டும்; உடம்பின்றி வினைசெய்தல் கூடாமையான் எனின், அற்றன்று. தன் உடம்பினை இயக்குவதாய உயிர்க்கு வடிவின்மையின் இறைவனும் அவ்வாறு உருவின்றி நின்றே தன்னுருவம் ஆகிய உலகத்தைத் தொழிற்படுத்துதல் அமையும் என்க'. 'இறைவன் உருவம் உடையவனே என்னின், உருவம் எல்லாம் காரியப்பொருள் ஆகலின், அவ்வுருவினைத் தருவான் வேறு ஓர் இறைவன் வேண்டும். வேண்டவே, அவனுக்கும் வேறு ஓர் இறைவன் வேண்டும் என்பது அநவத்தையாய் முடியும்' (அநவத்தா தோடம் - வரம்பின்மையாகிய குற்றம்) 'உருவமாவது எல்லாத்

தொழிலும் செய்யும் ஆற்றலைத் தடுப்பது ஆகலின், முதற்கண் இறைவன் அருவம் உருவம் என்னும் இருவகை வடிவும் இன்றி நின்றே தனது சத்தியால் விந்துவைக் கலக்கி நாதம் முதலியவற்றைத் தோற்றுவித்துப் பின்னர்த் தனது இச்சைவயத்தால் வடிவமும் கொள்வன் என்றுணர்க. இது 'விந்துவவத்தை விசேடத் தேந்தை' என்னும் ஞானமிர்தத்தினும் காண்க'.

'இறைவன் சங்கற்பத்தின் மயக்கற விந்துவைத் துயக்கறக்கலக்கல் செய்வன்; ஓவான்; செய்தற்கு ஐய! காரணம் ஆகம் எவையும் சேர்தல் செல்லான்' (ஞானமிர்தம் 60:- 11–15). 63, 64 ஆம் அகவல்களையும் கற்றுணர்தலும் விளக்கந்தரும். அவையும் இறைவனது அவிகாரத்தை விளக்குவனவே ஆகும்.

'இறைவனுக்குச் செயல் உள்ளதால் உடலும் இருத்தல் வேண்டும் எனின், இத் தடை பொருந்தாது. குயவன் முதலோர்க்கும் தன் உடலைத் தொழிற்படுத்தும் செயல் வேறு ஓர் உடலைக்கொண்டு நிகழ்கின்றதாகக் காண்டல் இல்லை. அதுபோலத் தன் உடலுருவாய உலகைத் தொழிற்படுத்துதற்கு வேறு ஓர் உடல் இறைவனுக்கு வேண்டா'. (மோட்சகாரிகை. 1, 2. உரை). கரணத்தால் அன்றிச் செய்யமாட்டாத குயவன் முதலோர் சங்கற்ப மாத்திரையால் செய்யும் முதல்வனுக்கு வினைமுதலாதற் பொதுமைபற்றி ஒருபுடையொப்புமையாம். முற்றுவமையாகாது. சங்கற்ப மாத்திரையாற் செய்யுஞ் செய்திக்குப் பகைப்பொருளாவன கட்டுண்டல் முதலிய குற்றங்கள். அவை அங்கே இருத்தற்கு இயைபு யாதும் இல்லை. கற்றநூற் சொல்லும் பொருளும் உள்ளத்தில் தோன்றுங்கால் உள்ளம் அவற்றில் தொடக்குண்ணுமை :-

நூலில் நரகம், துறக்கம், நிலம் முதலிய சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிகின்றது ஆன்மா. ஆன்மாவின் உள்ளம் 'நரகம்' என்ற சொல்லை எண்ணிடின், நரகத்துயர் உள்ளத்தைத் தாக்குதல் உண்டோ? 'துறக்கம்' என்ற

சொல்லை நினைத்திடின் துறக்க இன்பம் உள்ளத்திற்கு உண்டாகின்றதோ ? இல்லை.

புறத்துவிடயங்களை அறிந்துவந்த நனவுணர்வின் கண்ணே, கனவின்கண் கண்டவற்றை விளங்க அறிந்தவன் அப்பொழுது அவற்றில் தோடக்குண்ணுமை -

கனுவில் யானை, புலி, சிங்கம் முதலியவற்றைக் கண்டவன், நனவில் அவற்றைக் கண்டதாக எண்ணுங்கால் எண்ணிய உள்ளம் யானையால் இடர்ப்படுமோ ? புலியால் நலியப்படுமோ ? சிங்கத்தால் நுங்கப்படுமோ? படாதன்றே ? அவ்வாற்றால், சங்கற்பமாத்திரத்தாற் செய்யும் முதல் வனுக்கும் பந்தம் இல்லையாம்.

வெண்பா 4

" [5] நோக்காது நோக்கி நோடித்தன்றே [2] காலத்திற்
றக்காது நின்றுளத்திற் [4] கண் [1] டிறைவன்— [3] ஆக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
[7] கண்டவனில் [6] இற்றின்றுங் கட்டு "

இதன் பொருள் :- 1. ' முதல்வன் ' (இறப்பு நிகழ்வு எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத் தொழிலுஞ் செய்தும் தனக்கு விகாரம் இன்றி நிற்கும். 2. காலம்போல. விகாரப்படாது நின்று; 3. (பிரபஞ்சத்தைக் கரணத்தாற்) படைக்காது (சங்கற்பமாத்திரத்தாலே) 4. படைத்து; (அவ் வாறே); 5. காவாமற்காத்து அழிக்காது அழித்தலால், 6. இவ் வமலனுக்குப் பந்தம் இல்லையாதல், (கற்றநூற் சொல்லும் பொருளும் உள்சித்திற்றென்றுங்கால் உள்ளம் அவற்றிற் றேடக்குண்ணுதவாறு போலும்.) புறத்து 7. விடயங்களை அறிந்துவந்தலின் நனவுணர்வின்கண்ணே கனவிற் கண்ட வற்றை விளங்க அறிந்தவன் அப்பொழுது அவற்றிற் றேடக்குண்ணுதவாறுபோலும் இத்தன்மையது.

(இரண்டாவது அதிகரணம் முற்றிற்று)

மூன்றாவது அதிகரணம்

1. 'அந்தம் ஆதி' (முதற் சூத்திரப் பகுதி)

2. 'சங்காரமே முதல்' (பொழிப்புரை)

3. மற்றிருவரும் (பிறரும்) முத்தொழிற்படுவார்கள் (சூர்ணிக்கொத்து)

அநேகேசுரவாதிகள் கூற்று

தடை :- 'ஒடுங்கின சங்காரத்தின் அல்லது உற்பத்தி இல்லை' என்றதால், சங்கார கருத்தா உலகிற்கு முதற் கடவுள் என்பது புலனாயிற்று. ஆயினும், ஒருவர் முதல்வரா யிருந்து உலகைப் படைத்தல் முதலியவற்றைச் செய்கின்றார் எனல் பொருந்தாது. உலகம் அதிவிசித்திரமானது. தேர் முதலியனவற்றைப் பலர் கூடிச் செய்கின்றனர். அவற்றி னும் மிகப்பெரிய உலகத்திற்குச் சங்கார கருத்தா மாத்திரம் அமையாது. மற்றும் அத் தன்மையராய முதற் கடவுளர் பலரும் கூடிச்செய்தல் வேண்டும். அதனால் முதற் கடவுளர் பலர் (அநேகேசுவரர்) வேண்டும் என்பதில் ஐயம் இல்லை. சங்கார கருத்தா ஒருவனே உலகிற்கு முதற் கடவுள் என்பது பொருந்தாது.

விடை :- சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வு இன்றி நின்ற சங்காரத்தின்வழி(ப் பரதந்திரமாய் நிற்பதே) அல்லது சுதந்திரம் இன்றி நிற்ற(ல் உடையது ஆத)லான், சங்காரமே முதல்.

இதில் உள்ள கருத்துக்களை விரித்துணர்ந்துகொள்க :-

1. பிரபஞ்சம் சுட்டுணர்வு (எனப்பட்டாலும் ஒன்றேன் றாகச் சுட்டி யறிவது சேதனப் பிரபஞ்சம். அப் பிரபஞ்சம் உருவும் அருவும் என்று இருவேறு வகைப்படும் எனக் கொள்க). பிரபஞ்சம் சுட்டுணர்வை யுடையது. இது சேதனப் பிரபஞ்சத்தை மட்டும் குறிப்பதாகும்.

2. சுட்டுணர்வு இன்றி நின்ற சங்காரம் (சங்காரம் ஆகுபெயராய்ச் சங்காரத்தைச் செய்யுங் கருத்தாவை உணர்த்தும். அக் கருத்தா எதையும் சுட்டியறிய வேண்டா தது. அக்கருத்தாவுக்குச் சுட்டியறியக் கிடப்பதொன்றில்லை. பசு பாசங்களையே சுட்டியறியவேண்டும். அவ்விரண்டும் அவனுள் வியாப்பியம். அவற்ருேடு வேற்றுமை யில்லாத முதல்வன் சுட்டுணர்வின்றி, எவ்வுலகும் ஒன்ருய் நின்ற வாறே அறிவான். அறிந்தாங்கறிவன். நம்மனோர்போலத் தனக்கு வேருகச் சுட்டி அறிவான் அல்லன். சேதனப் பிரபஞ்சம் சுட்டியறிதல் உடையது. சங்கார கருத்தா சுட்டாமல் அறிதல் உடையது. ஆருவது சூத்திரம் முதலிய வற்ருல் இதனைத் தெளியலாம்.)

3. சங்காரத்தின் வழிநிற்றல் ஆவது சுதந்திரம் இன்றி நிற்றல் ஆம். பரதந்திரமாய் நிற்பது. அவ்வாறன்றித் தனக் கெனச் சுதந்திரமுடையதாய் நிற்பதன்று. ஆதலின் சங்கார காரணன் ஒருவனே உலகிற்கு முதற் கடவுள். ஏனையோர் முதற் கடவுளர் அல்லர்.

4. சுட்டியுணர்வது சேதனப்பிரபஞ்சம். சுட்டியுணரப் படுவது அசேதனப் பிரபஞ்சம். சுட்டுணர்வினதாகிய (சேதனப்) பிரபஞ்சம் எனல் வேண்டுவது சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் எனப்பட்டது.

5. 'சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான் சங்காரமே முதல்' என்றுள்ள பொழிப்புரையைத் தெளிய வுணர வேண்டி, இங்கு விடை என்றதன் தொடக்கத்தில் சிறிது பிறைவளைவிற்குள் சேர்க்கப்பட்டவற்றை அறிதல் வேண்டும். அதை நன்குணர்தல் இன்றியமையாதது.

ஏனையோர் சங்கார கருத்தாவின் வழியல்லது சுதந்திர மாய் நிற்றல் இல்லாமையான், சங்காரமே முதல் என்பது கருத்து. பொழிப்புரையில் அல்லது இல்லை என்னும் வாய்ப் பாட்டிற்கு ஏற்பப் பொருத்திக்கொள்க. 'அல்லது இன்றி

நிற்றலான் ' என இருத்தல் மயக்கம் செய்யும். வழி அல்லது சுதந்திரமாய் நிற்றல் இன்மையான் என இருப்பின் தெளி வாகும். 'அல்லது' என்னுஞ் சொல் இல்லாதிருப்பின், இனிது விளங்கும்.

6. ஏனையோர் (அநேகர்) ஆகிய சேதனப் பிரபஞ்சத் திற்குச் சுதந்திரம் இல்லாததையும் சங்காரகாரணனுக்குச் சுதந்திரம் உள்ளதையும் ஏதுமுகத்தால் காட்டவேண்டி, சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் என்றும், சுட்டுணர்வின்றி நின்ற சங்காரம் என்றும் அடை கொடுத்து விளக்கப்பட்டன.

7. சங்கார கருத்தாவே முதல் ஏனையோர் (அநேகர்) அல்லர் என்று விலக்குதற்கு உரியது சேதனப் பிரபஞ்சமே ஆதலின், 'பிரபஞ்சம்' என்றது சேதனப் பிரபஞ்சத்தையே ஆகும். 'சங்காரமே' என்ற ஏகாரம் அச்சேதனப் பிரபஞ் சத்தைப் பிரித்து நின்றதனுல் பிரிநிலைஏகாரம் ஆயிற்று. ஏகாரம் விலக்கியது சேதனப் பிரபஞ்சத்தை. அவரின் பிரித்தது சங்கார கருத்தாவை எனலுமாம்.

8. 'தேர் முதலாயின பலரால் செய்யப்படினும் அப் பலரும் ஒருவன் ஏவல்வழி நின்றே செய்வர் ஆகலானும், வேதத்துட் காரண வாக்கியங்களிற் சுட்டுணர்வினர் ஆகிய நாராயணன், இரணியகருப்பன், இந்திரன், அங்கி, சூரியன் முதலியோரைக் காரணம் என்றது, குயவன்போல் அவாந்தர காரணம் ஆதல்பற்றியே ஆகலின், அவை எல்லாம் ஆகு பெயரால் சங்காரகாரணன் ஆகிய முதற் கடவுளையே உணர்த்தி நிற்கும் ஆகலானும், செய்தும் செய்வித்தும் எல்லாத் தொழிற்கும் வினைமுதலாய் நிற்கும் முதற் கடவுள் சங்காரகருத்தா ஒருவனே என்பது கருத்து'. (சிற்றுரை). (குயவன், இயற்றுவோன். முதல்வன் ஏவுவோன்).

9. தூலவுடம்போடு கூடிய உயிரை உருவுயிர் என்றும் சூக்கும உடம்போடு கூடிய உயிரை அருவுயிர் என்றும் குறிப்பர். உயிர்க்கு அருவும் உருவும் இல்லை.

வெண்பாப் பொருள்

சிவஞான போதத்திலுள்ள வெண்பாக்களின் பொருள், அதன் சூத்திரம், வார்த்திகப் பொழிப்பு, சிவஞான சித்தியார், சூர்ணிக் கொத்து முதலியவற்றின் துணைக்கொண் டுணர்வார்க்கு இனிது விளங்கும். ஆசிரியர் மாதவச் சிவஞானயோகிகள் அருளியவுரை அத் தகு நெறியிலெழுதப் பெற்றனவேயாயினும், சில இடங்களில் தக்க காரணங்கொண்டு, கற்பார்க்கு வாயுரையாகத் தோன்றுதவாறு வலிந்து பொருள்கொண்டது போலத் தோன்றும். அங்கெல்லாம் நம் சிற்றறிவு கொண்டு ஒரு முடிபு செய்து, அவருரையைப் பொற்றுதொழிதல் சிறிதும் பொருத்த மன்று. அவ்வெண்பாக்களுக்கு அவர்க்கு முன்னிருந்தாரும் பின்வந்தாரும் எழுதியுள்ள வுரைகளிற் சிற்சில இடங்களுள் மாறுபாடும் வேறுபாடும் பொருந்தாமையும் வேறு குற்றங்களும் தோன்றுகின்றன. அவற்றைப் பொருளாக் கொள்வாரும் இலர். அதனுல், அம் முனிவர்பிரா னுரையே ஆட்சியிலிருந்து நம்மை உய்விக்கின்றது. இங்கு அடியேனும் ஒரு வெண்பாவின் பொருளை எழுதத் துணிந்தேன். இத் துணிவும் அப் பெருமா னருளிய உரைகளைக் கற்றுணர் வன்மையா லன்றி வந்ததன்று. அவருரையை இது மறுப்பது மன்று.

சிவஞானபோதத்தின் முதற் சூத்திரத்து மூன்றுவது அதிகரணத்திலுள்ள வெண்பா

"ஒன்றலா வொன்றுல் உளதாகி நின்றவா
றென்றலா வொன்றில்அவை ஈறுதல்—ஒன்றலா
ஈறேமுதல் அதனின் ஈறலா வொன்றுபல
வாறே தொழும்பாகும் அங்கு"

என்பது. இதற்கு அம் முனிவர் அருளிய வுரையாவது:

"என்பது உதாரணம் என்னுதலிற்றோ எனின், அங்ஙனமாயினுஞ் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாலுயிற்போலச் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமும் பலவுள எனக் கொடும் ஒன்றே என்றற்குப் பிரமாணம் என்னை என்னுங் கடாவை ஆசங்கித்து ஏதுவை வலியுறுத்துதல் நுதலிற்று.

இதன் பொருள்.

அவை - சேதனப் பிரபஞ்சத் தொகுதி, ஒன்று அலா ஒன்ருல் - உருவும் அருவும் என்னும் அவ்விரு கூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத ஒப்பற்ற பரம் பொருளாலே, உளது ஆகி நின்றவாறு - சிருட்டிப் பட்டுத் திதிப்பட்டவாறே, ஒன்று அலா ஒன்றில் ஈருதல் - அந்தப் பரம்பொருளின் கண்ணே சங்காரப் படுதலால், ஒன்று அலா ஈறே முதல் - அச் சங்காரக் கடவுளொருவனே உலகிற்கு முதற் கடவுள். அற்றேல் இவ்வாறு முத்தொழிற்படுஞ் சேதனப் பிரபஞ்சம் வீடுபெற்ற வழிச் சுட்டுணர் வின்றிச் சிவ சமமாம் என வேதத்தும் ஆகமத்தும் ஓதுதலின் அவ்வழி அவையும் முதற்கடவுளாம் என்றற்கு இழுக்கென்னை யெனின், அதனின் ஈறு அலா ஒன்று - அப் பரம்பொருள்போல் அழிவின்றி நித்தமாய்ச் சேதனப் பிரபஞ்சம், அங்கு - வீடுபேற்றின் கண்ணும், பலவாறே தொழும்பு ஆகும் - பலவாற்ருனும் பரம்பொருளுக்கே அடிமையாம்'' எ-று.

இவ் வுரையுள் ஈண்டு உளங்கொளற்பாலன இவை :-

1. ஒன்று அலா ஒன்று - உரு அரு என்னும் இரு கூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத ஒப்பற்ற பரம் பொருள.

2. ஒன்று அலா ஈறு - அச் சங்காரக் கடவுள்.

3. ஈறலா ஒன்று - அழிவின்றி நித்தமாய அச் சேதனப் பிரபஞ்சம்.

இவ் வுரையின் பொருத்தத்தை முதற் சூத்திரவுரை முழுதும் முறையே கற்றுணர்ந்தாலன்றி உணர்தலரிது. மிகச் சிறந்த உரை யென்பதை எவரும் மறுத்தற்கியலாது. அடியேன் கருதிய வுரையோ இவ்வுரையின் வேறுபடினும் மாறுபடாது. அவ் வேறுபாடு முனிவருரைக்குள்ள பொருத்தம் வாய்க்கப் பெருமை யாற் கொள்ளத் தக்கதன்று என்று அறிஞர் தள்ளினும் தள்ளுக. கொள்ளினுங் கொள்ளுக. அடியேனுக்குத் தோன்றிய வுரையும் உலகில் வெளிப்படுதலாற் கேடொன்று மின்று என்ற நினைவே மீண்டும் மீண்டும் எழுதத் தூண்டியதால் எழுதலானேன்.

என் கருத்தை வெளியிடுமுன் இங்குச் சிற்சில குறித்தல் இன்றியமையாததாயுள்ளது.

1. இவ் வேண்பாவின் முன்னர், மேற்கோளும் ஏதுவுமா யுள்ளவை முறையே, 'இனி, சங்காரமே முதலேன்றது' 'கட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத் தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்' என்று வருவன. இதில் 'சுட்டுணர்வாகிய பிரபஞ்சம்,' 'சுட்டுணர்வின்றி நின்ற சங்காரம்' என்ற தொடர்களை மறத்தல் கூடாது.

2. 'அவன் அவள் அது எனும் அவை' என்ற முதற் சூத்திரப் பகுதிக்குரிய மேற்கோள் 'ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டடப்பட்ட பிரபஞ்சம்' என்பது. இதில் சுட்டுச் சொற்கட்கு ஒருமை யெண்ணினடியாகித் தோன்றிய சொற்கள் பொருளா யமைந்தன என்பதும், ஒன்று, ஒருத்தி, ஒருவன் எனச் சுட்டுதல் மெய்கண்ட தேவர்க்கு உடன்பாடு என்பதும் அவை என்றதன் பொருளும் நினைவில் வைத்தற் குரியன.

3. இரண்டாவது சூத்திரத்து முதலதிகாரணத்தின்ஏது, 'அத்துவிதமென்ற சொல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவது உண்மையின், அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை (அநந்நியத்தை) உணர்த்துமாயிட்டு' என்றுளது. இதில், 'ஏகம் என்று சுட்டுவது' என்றதைச் சோரவிடலாகாது.

4. 'அது என்னும் ஒன்றன்று' (சூ. 6. வே. 6.)

இதில் 'ஒன்று' என்றதன் பொருளை அறிக. 'ஒன்றேனு மதனால் ஒன்றேன்றுரைப்பதுண்டு' (சித்தியார். 248.)

5. 'ஒன்று என்ற நீ' (சூ. 2, வே. 2.)

6. 'அவன் அவள் அது' என்னும் முதனூற்பகுதிக்கு வழிநூலாகிய சிவஞான சித்தியாருள், ஒருவனோடொருத்தி யோன்று' என்றுரைத்தவாற்றை யுணர்க.

7. ஒன்று, ஒருவன், ஒருத்தி என்னும் பெயராட்சியின் போழுது சுட்டுவிரலைக் காட்டுதல் இன்றும் வழக்கிலுண்மையை எண்ணிப் பார்க்க.

இவற்றை நோக்கின், ஒன்று என்னும் பெயர்க்குச் சுட்டுணர்வு என்னும் பொருள் கோடல் போருந்துமேன்று தோன்றலாம்.

1. 'சுட்டுணர்வாகிய பிரபஞ்சம்'.

2. 'சுட்டுணர்வின்றி நின்ற சங்காரம்' என்ற இரண்டனை யும் இவ்வெண்பாவிற் குறித்தல் எல்லோர்க்கும் உடன்பாடே.

'ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம்' என்றதில், ஒருவன் ஒருத்தி என்ற இரண்டும் சுட்டுணர்வாகிய (சேதநப்) பிரபஞ்சம். ஏனையது சுட்டப்பட்ட (அசேதநப்) பிரபஞ்சம்.

இவ்வெண்பாவில் வரும் பெயர்ப் பொருள் :-

1. ஒன்றலா வொன்று (சுட்டுணர்வின்றி நின்ற தனி முதல்வன்).

2. ஒன்றலா வீறு (சுட்டுணர்வின்றி நின்ற சங்கார கருத்தா).

3. ஈறலா வொன்று (சங்கார கருத்தா வல்லாத சுட்டுணர் வாகிய பசு).

ஈண்டு, எண்ணிட்டும் இருதலைப் பிறையிட்டுங் குறித்த வாறு கொண்ட உரையாவது :-

'ஒன்றலா வொன்றால் - சுட்டுணர்வின்றி நின்ற தனி முதல்வனால்,

உளதாகி நின்றவாறு - தோற்றப்பட்டும் காக்கப்பட்டும் நின்றவாறு.

ஒன்றலா வொன்றில் - அத் தனி முதல்வன்கண்,

அவை - சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் (சேதநப் பிரபஞ்சம்)'

ஈறு ஆதல் - ஒடுக்கம் அடைதலால், சங்காரப் படுதலால் (சங்காரமாதலால்) [இது பாசத்திற் குண்டாகும் 'அழிவன்று. அழிப்பு இளைப்பாற்றல்' என்பதறிக].

ஒன்றலா ஈறே-சுட்டுணர்வின்றி நின்ற சங்கார கருத்தாவே

முதல் - உலகிற்கு முதற்கடவுள். (பதி பசு பாசம் என்னும் முப்பொருளுள், பாசம் காரண ரூபமாய் அழிவது. பசுபதியின் கண் சங்காரப்பட்டு இளைப்பாறுவது. பதியே முதற்கடவுள் என்பது பாரிசேட அளவையாற் பெறப்பட்டது,

அதனின் - அம்முதற் கடவுளிடத்தில், (அதைப்போல எனலும் ஆம்),

ஈறலாவோன்று - அச்சங்கார கருத்தா அல்லாத சுட்டுணர் வாகிய பிரபஞ்சம்,

அங்கு - வீடுபேற்றிலும்,

பலவாறே தொழும்பாகும் - பலவாற்றாலும் அத்தனி முதல் வனுக்கு அடிமையாகும். 'அவையுடைமை ஆளாம் நாம் அங்கு' என்பது.

ஒன்று - சுட்டுணர்வு, ஒன்றலா வோன்று - சுட்டுணர் வல்லாத ஒப்பற்ற சிவர், ஈறு - ஈற்றிற்குரிய பிரபஞ்சத்தை ஈறுறுத்துமவன். ஈறலாவோன்று - சங்காரம் புரியும் இறைவ னல்லாத பசு எனலுமாம். முற் கூறியவாறு சங்கார கருத்தா வல்லாத சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் எனக்கொள்வதும், அதற் கேற்ப உரைப்பதும் பொருந்தும். தொழும்பாதல் - சங்காரத்தின் வழிநிற்றல், சுதந்திரமாய் நில்லாமை. (சித்தாந்தம்)

இச் சூத்திரத் ததிகரணங்களாற் போந்த தொகைப் பொருளாவது :—தோற்றக்கேடுகளதுண்மை காட்சி முதலிய அளவைகளான் அறிய வாராமையிற் பிரபஞ்சம் நித்தப் பொருளேயாம். அன்றித் தோன்றி யழியுமெனக்கொளினும், இல்பொருள் தத்தஞ் சார்பிற்றோன்றி நின்றழிதல் இயற்கை யென வமையும்; செயற்கை யென்றதற்கு ஓர் ஏது இன்மை யின். மற்றுஉள் பொருளாயின், அதுவே யமையும் இறைவன் வேண்டா; இரண்டுஉள் பொருள் கோடல் மிகையாகலின். வேண்டுமாயினும் மாயோன் முதலிய கடவுளரில் ஒருவனே யமையும்; அவரை யொழித்துச் சங்காரகருத்தா முதற் கடவுளென்றதற்குப் பிரமாணமென்னை ? பிரமாணமுண்டா யினும் அதிவிசித்திரமாய பிரபஞ்சம் ஒருவனாற் செய்தல் கூடாமையின், மற்றும் அவ்வியல்பினராய முதற் கடவுளர் பலர் உளராதல் வேண்டும் என உலோகாயதர், மீமாஞ்சகர், புத்தர், சமணர், சாங்கியர், பாஞ்ராத்திரிகள் அநேகேசுரவாதி கள் மதம்பற்றிப் பூருவபக்கம் நிகழ்ந்தவழி அவரை மறுத்துச் சித்தாந்தஞ்செய்து முதற்கடவுளது உண்மை பொதுவகை யானுஞ் சிறப்புவகையானுங் கருதலளவையின் வைத்து உணர்த்தியவாரென உணர்க. இவ்வாறு சூத்திரந்தோறும் உணர்ந்துரைத்துக்கொள்க.

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது

மகா கைலாச யாத்திரை

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கள்
ஆதீனம் சூப்பரின்டேண்ட்டேண்ட், தேவஸ்தானம் பிரிவு

(சென்ற இதழ் தொடர்ச்சி பக்கம் 485. கடிதச் சுருக்கம்.)

Camp: Himalayas
Bageshwar U. P.

3—7—59 திட்டப்படியே நைநிடாலிலிருந்து புறப்பட்டு அன்றிரவு 62 மைல் பிரயாணம் செய்து ஜாகேஷ்வார் என்னும் தலத்துக்குப் போனோம். அது பாலகைலாசம் ஜோதிர்லிங்கங்களுள் தாருகாவனம் நாகேசம் என்று சொல்கிறார்கள். அங்கு தரிசனம் செய்துகொண்டு வரும் வழியில் துண்டேஸ்வரர் (கேதாரம் போன்ற திருவுரு) அல்மோராவில் நந்தாதேவி, திரிபுரசுந்தரி. வியாகரணதேவி, பிறகு சோமேசம், வைத்திய நாதம் தரிசனம் செய்துகொண்டு 4—7—59உ இரவு 8 மணிக்கு இங்கு வந்துசேர்ந்தோம். இங்கெல்லாம் காலை 4 மணிக்கே விடியத்தொடங்கி இரவு 8 மணி வரை வெளிச்சம் இருக்கிறது. ஜகேஷ்வாரத்தில் அட்டை அதிகம். சிலரைக் கடித்துவிட்டது இங்கிருந்து கால்நடை தொடங்குகிறது. கடைசி தந்தி ஆபீஸ் இங்குதான். இதற்கு மேல் MILAM போஸ்டாபீஸ் உண்டு. கடைசி இந்திய எல்லை. இந்த வழியில் நந்தாதேவி, சிகரம் தரிசனம் கிடைக்கும். பிண்டரி Glacier பார்க்கலாம். எல்லாம் மிக வசதியாகவே நடந்து வருகிறது.

10—7—59,
மன்ஸ்யாரி,

நேற்று மாலை இங்கு, வந்துசேர்ந்தோம். இதன் உயரம் 6500 அடி. நேற்று மிகக் கடுமையான ஏற்றம் 12 மைல். இறக்கம் 2½ மைல். மிலம் இந்தியாவில் கடைசி கிராமம்

இங்கிருந்து அது 40 மைல் தொலைவில் உள்ளது. அங்கிருந்து கைலாயம் 70 மைல் உள்ளது. இவ்வூர் மிக நல்ல ஊர். கடைகள், அஞ்சலகம் (Post Office) பள்ளி (School) எல்லாம் இருக்கின்றன. பால்தயிர் கிடைக்கும். அட்டை மிக அதிகம். இங்கிருந்து பஞ்சசூலி என்ற 5 சிகரங்களின் காட்சி கிடைக் கிறது. அது பஞ்சபாண்டவர், கண்ணபிரான் வழிபட்ட சிவலிங்கத் திருமேனியென்று வழங்குகின்றனர், எல்லோரும் நலம். இங்கு இன்று தங்கி நாளைக்காலையில் புறப்பட எண்ணம். பயணம் சந்துஷ்டியும், உற்சாகமும் கொடுக்கிறது. கஷ்டங் களும் நிறைய உண்டு. சிம்லாக்காரர், மராட்டியர், உத்திரப் பிரதேசத்தார், கன்னடவர், தமிழர், மலையாளர் ஆக எல் லோரும் கூடி இருபத்தைவர் (25) செல்லுகின்றோம். பெண்டு களும், முதியோர்களும் வருகின்றார்கள்,

16—7—59,
மிலாம்.

மாலை 3 மணிக்கு மிலாம் சேர்ந்தோம். பாகேஸ்வர மிருந்து 78 மைல்கள் கால்நடை பயணம். வழியில் 3 இடங் களில் குகை வாசம். மார்த்தோலி என்னும் இடத்தில் நந்தா தேவியின் கோயிலிருக்கிறது. அதன் உயரம் 12000 அடி. அதனுள் கல்லாற் செய்த திருவுருவம் உளது. அவ்வுருவில் பல கற்கள் 3 அங்குலம் முதல் 4 அங்குலம் நீளம், 1 அங்குலம் கனமுள்ளனவாய் இருக்கின்றன. அவை மிக்க ஒளியுடையன. அதைத் தரிசித்தபின் இங்கு வந்தோம். வருகின்ற வழியில் இமயத்தில் உயரிய சிகரங்களில் நந்தாதேவி தரிசனம் கிடைக் கின்றது. அதன் மிக அருகிலேயே யாத்திரை பாதை உளது. ஒரு பெரிய அம்பிகையின் திருவுருவம். தலையில் முடிபூண்டு அமர்ந்த திருக்கோலம். மிக அழகாகவிருக்கிறது. கண்டு பிரியப் பிரியம் பிறவாத சிறந்த நிலை. இங்கிருந்து 2½ மைலில் உலகில் பெரிய பனிப்படிவு என்று வர்ணிக்கப்படும் மிலாம் (Milam Claciers) உளது. அங்கிருந்து கௌரிகங்கை என்ற நதி உற்பத்தியாகிறது. திரிசூலி எனப்படுவது முப்பெருந் திருவுரு. நேற்று வந்ததும் சொக்கலிங்கப் பிரசாதம், துர்க்கா தேவி பிரசாதம், வேளூர், திருநள்ளாறு, மதுரை முதலிய க்ஷேத்திரப் பிரசாதங்கள் அஞ்சல்வழி வந்து கிடைத்தன. திருவருள் துணைநின்று உதவுவதன் ஞானக்குறி என்று நம்

குருமணி திருவாய் மலர்ந்த அருண்மொழியைப் பலரும் கேட்டு மகிழ்ந்தனர். அம்மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. முகாமுக்கு அனுப்பிய நூல்கள் பலவும் கிடைத்தன. ஞானசம்பந்தம் 10—7—59 திங்களிதழும் கிடைத்தது. நேற்று நல்ல வெயில். இன்று காலை முதல் பனி மூட்டம். மாலையில் சிறு தூரல். குளிர் மிகுதி. ஜலத்தில் கை வைத்தால் மூடி திறப்பது சுலபமல்ல. நாளை அல்லது மறுநாள் மிலாம் கிளேசியர் (Milam Clacier) பார்க்க எண்ணம். திங்கட்கிழமை 20—7—59 காலையில் இங்கிருந்து புறப்பட ஏற்பாடு. இன்னும் மூன்று வாரங்களுக்குக் கடிதம் எழுதஇயலாது. அஞ்சலகத்துள் இதுவே கடைசியானது. இதன்பிறகு திபேத் எல்லை 20 மைல். மலை பள்ளத்தாக்கில் குதிரையில் செல்லவேணுமாம். இங்கிருந்து கயிலை போய்த் திரும்ப சுமார் 27 நாட்கள் ஆகுமாம். 20—7—59உ சோமவாரத்தன்று புறப்பட்டு, 27—7—59உ சோமவாரத்தன்று கயிலைக் காட்சி காணப் பெறலாம் என்ற நோக்கம்.

அதன்படி கயிலையைத் தரிசித்து வலம்வந்து மானஸ ஸரோவர் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி கயிலை வழிபாடு முடித்துக் கொண்டு தற்சமயம் திரும்புகால் யாத்திரை நடைபெறும்.

திரு. ப. திருஞானசம்பந்தன்

செயலாளர், திருப்புகழ்ச் சபை, போடிநாயக்கனூர்.

தருமை அருள் அரசு இருக்கை சதம் ஒரு கால் மரபு வந்த
தனிநேர் இல்லார்
குருமணிசுப் பிரமணி யெங்கோ ஞான சம்பந்த குரவன் இந்நாள்
அருமையினும் அருமையெனும் கயிலாய மலைமலையா தணுகி மீளும்
பெருமை அடியேம் பலகால் பேசிமகிழ்ந் திடலாகும் பிறர்பால்
நன்றே.

செயத்தகவே செய்வர் பெரியார் என்பர் யாவருக்கும் செய்யலாகா
வியத்தகுகாண் கயிலைசென்று மீளல்அரிது அரிதென்பார்
வியக்கும் வண்ணம்
நயத்தகுண அருட்டருமை முதல்வர்குருநாதன் அருள்நாதன் என்ன
வயத்தர்செயல் அலவென்பேன் மரபுமுதல் வனெடுதோடர்
பாமாமாறே.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு
ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கு



5—7—59 அன்று சென்னை மாநில கவர்னர் கனம். திரு. விஷ்ணுராம்மேதி அவர்கள் விஜயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர்
ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கு

7—7—59 அன்று சென்னை மாநில கவர்னர் கனம். திரு. விஷ்ணுராம்மேதி அவர்கள் விஜயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர்
ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு





7—7—59 அன்று சென்னை மாநில கவர்னர் கனம். திரு. விஷ்ணுராம்மேதி அவர்கள் விஜயம்

திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயிலுக்கு 8—7—59 அன்று
சென்னை மாநில கவர்னர் கனம். திரு. விஷ்ணுராம்மேதி அவர்கள் விஜயம்

பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்
ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

ஊர்வன

பாம்பு வகை

1. மலைப்பாம்பு

இது மாசுணம் என்று நூல்களில் வழங்கப்படுகின்றது. இது மிகப் பெரிதாய் நீண்டிருக்கும். மதம்மிக்க பெரிய யானையையும் சுற்றிக்கொண்டு நெருக்கி அதன் வலியை அடக்கிக் கொன்று தின்னும்.

" மைந்துமலி சினத்த களிறுமத னழிக்கும்
துஞ்சுமரம் கடுக்கும் மாசுணம் " (மலைபடுகடா - 260, 261)

என்று பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் இம் மாசுணத்தின் இயல்பை விளக்கியிருத்தல் காண்க. "வலிமை மிகுந்த கோபத்தையுடைய களிற்றியானையின் மதத்தை அழிக்க வல்லதாய்த் தரையில் வீழ்ந்து கிடக்கும் பெருமரத்தைப் போன்றுள்ள மலைப்பாம்பு" என்பது பொருள். இவ்வாறு யானையை அகப்படுத்திக் கொன்று தின்ற கோபத்தையுடைய இம் மலைப்பாம்பு வெளிறு இல்லாத வயிரத்தையுடைய பெரிய மரத்தைச் சுற்றிப் பிணித்துக்கொண்டு நெரித்து முரித்து அம் மரத்தைத் தள்ளுமாம். இதன் இயல்பைச் சேந்தன்கீரனார் என்னும் புலவர் கண்டு கூறுகின்றார்.

" களிறகப் படுத்த பெருஞ்சின மாசுணம்
வெளிறில் காழ்மரம் பிணித்து நனி மிளிர்க்கும் " (நற்றி-261)

என்றது காண்க. இம் மலைப்பாம்பிடம் ஒரு களிற்றியானை அகப்பட்டுக்கொண்டு வருந்துவதைக் கண்ட அதன் காதல் மடப்பிடி ஆற்றாது வருந்தி அஞ்சி அரற்றுகின்ற துன்பப் பூசல் நீண்ட மலைப் பக்கங்களில் எல்லாம் ஒலிக்கின்றதாம். இந் நிகழ்ச்சியை மாமூலனார்,

" இனஞ்சால் வயக்களிறு பாந்தள் பட்டெனத்
துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத் தியம்பும் " (நற்றி - 14)

என்று விளக்கியுள்ளார். பாம்பின் வாய்ப்பட்டுச் சாம்பும் களிற்றைக் கண்ட காதல் மடப்பிடி இறந்துபடவில்லை; அத்தனையே குறை; இறக்குமளவு துன்பத்தை எய்திற்று என்பது விளக்க " துஞ்சாத் துயரத் தஞ்சுபிடி " என்றார்.

2. நல்லபாம்பு

இது நஞ்சு உள்ள பாம்பு. படம் எடுத்து ஆடும் இயல்பினது. மாணிக்கமணியைத் தன்பால் கொண்டுள்ள நல்ல பாம்புகளும் உண்டு. மாணிக்கத்தையுடைய முதிர்ந்த பாம்பு இரவில் அம் மணியை உமிழ்ந்துவிட்டு அதன் ஒளியில் இரை தேடுமாம். நல்லபாம்பின் குட்டி சிறியதும் இளையதும் ஆயினும் நஞ்சுடையது ஆதலின் காட்டுயானையையும் வாட்டும் இயல்பின தாக இருக்குமாம். சத்திநாதனார் என்னும் சங்கப் புலவர் சாற்றுகின்றார். ஒருதலைமகன் தன் பாங்கற்குத் தன்னிலைமையை விளக்கும்போழுது தான் பெருவலியும் பேரறிவும் உடையனாயிருந்தும் ஓரிளைய பெண் தன்னைக் காதலால் வருத்தியதை யுணர்த்தச்,

" சிறுவெள் ளரவின் அவ்வரிக் குருளை
கானயானை யணங்கி யாஅங்கு " (குறுந் - 119)

என்ற உவமையைக் கூறியதாக அப் புலவர் கூறியுள்ளமை காண்க.

ஒரு தலைவி தலைவன் பிரிவிற்கு ஆற்றாது மெலிந்து நலிகின்றாள். 'அன்பு நிறைந்த தலைவர் பிரியகில்லார்' என்று நம்பித் தலைவனைத் தடுக்காது இருந்துவிட்டாள். தலைவனோ 'இவளிடம் சொல்லிப் பிரிந்தால் அன்பு மிகுதியால் யான் செல்ல உடன் படாள்' என்று துணிந்து சொல்லாமல் செல்லலானான். இருவரும் ஒருவரை ஒருவர் அன்பினால் ஆளுகின்றவர்கள்தாம். தலைவன் செல்லான் என்று தலைவி இகழ்ந்திருந்ததற்கும் தலைவி ஒல்லாள் என்று தலைவன் சொல்லாமல் செல்லு

தற்கும் அவர் அன்பின் ஆட்சியே காரணம். இவ்விரண்டு ஆண்மைகளும் செய்த வருத்தம் தலைவியின் அல்லல் மிக்க நெஞ்சினை மிகவும் கலக்குகின்றது. இவ்வாறு கலக்குதற்கு உவமையாகத் தலைவி,

" நல்லராக் கதுவியாங்கென்
அல்லல்நெஞ்சம் அலமலக்குறுமே " (குறுந் - 43)

என்று கூறியதாக ஔவையார் கூறியுள்ளார். இதனால் நல்ல பாம்பு கடித்தால் மக்கள் பெருந்துயர் எய்தி இறந்துபடுவர் என்பதை யூகித்து அறியலாம். நல்லபாம்பு சினமிக்குச் சீறும் பொழுது அதன் தலை மேலெழுந்து விரியும் இயல்பை யுணர்ந்த போதும்பிற் புல்லாளங்கண்ணியார் என்ற புலவர்,

" வெஞ்சின அரவின் பையணந்தன்ன
தண்கமழ் கோடல் தாதுபிணிஅவிழ " (அகநா - 154)

என வெண்காந்தளின் போது மலர்தற்கு உவமையாகக் கூறி யுள்ளார். வெண்காந்தளின் அரும்பு மேலோங்கிச் சிறிது வளைந்து மலர்ந்துள்ள தோற்றம் படம் எடுத்த பாம்புபோலக் காணப்படுகின்றது என்பது கருத்து. இங்குக் கூறிய உவமையையே சிறிது மாற்றி,

" பாம்புபை அவிந்தது போலக்
கூம்பி......காந்தள் " (குறுந்-182)

எனக் காந்தள் போது கூம்பியுள்ள நிலைமைக்குப் பாம்பு பை அவிந்த நிலைமையை யுவமை கூறியிருத்தல் காண்க.

நெய்தல் நிலத்தில் வழியருகே நெய்தல் அரும்பு இருக் கின்றது. தலைவன் தேரேறித் தலைவியின் ஊர்க்கு அவ் வழியே வருகின்றான். அவன் தேர்ச்சக்கரம் பட்டு நெய்தல் அரும்பின் முனை குறைந்துவிடுகின்றது. அந்தக் குறையரும்பு மலர்ந்து நிமிர்ந்து தோன்றுவது படமெடுத்த பாம்பின் தலைபோலக் காணப்படுகின்றதாம். இதனைக் குமிழிஞாழலார் நப்பசலையார் என்னும் புலவர்,

" ஆழி, நுதிமுகங் குறைந்த போதிமுகிழ் நெய்தல்
பாம்புயர் தலையின் காம்புவன நிவப்ப
இரவுவந்தன்றால் திண்டேர் " (அகநா - 160)

என விளக்கியிருக்கின்றார். இதனால் காந்தள் மலரே அன்றி முனை குறைந்த நெய்தல் மலரும் படப்பையை விரித்த பாம்பின் தலைபோல் காணப்படுகின்றமை கண்டோம். யானையையும் கொல்லவல்ல இந்த நஞ்சுடைய நல்லபாம்பு புற்றுஞ்சோற்றைக் கிண்டும் கரடியின் கூரிய நகம்பட்டவழி மாய்ந்து வருந்துமாம்.

" ஈயற் புற்றத் திரும்புறத் திருந்த
குரும்பி வல்சி பெருங்கை யேற்றை
தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்பு மதனழியும் " (அகநா - 8)

என இந் நிகழ்ச்சியைப் பெருங்குன்றூர்கிழார் கூறியிருத்தல் காண்க.

பாம்புக்குப் பகை இடியேறு

பாம்புக்குக் கண்ணே செவியாக அமைந்திருத்தலின் இடியின் பேரொலி பொருது இறந்துபடுதலுமுண்டு. கட்செவி என்று பாம்புக்குப் பெயருண்மை அறிக. கட்பொறியும், செவிப் பொறியும் ஒருங்கே அமையப்பெற்ற பாம்பு இடியொலி கேட்ட அதிர்ச்சியால் அவ்விரண்டு பொறியையும் சேர இழந்து அல்லல் உற்று இறப்பது இயல்பே. இந் நிகழ்ச்சியைக் கண்ட புலவர்கள் பாம்புக்கும் இடிக்கும் பகையுண்டு எனக் கற்பனை செய்து உள்ளார்கள்:

" உருமுச் சிவந்தெறிந்த உரனழி பாம்பின் " (அகநா - 92)

என்புழி இடி பாம்பின்மேல் கோபித்துத் தாக்கியதாகவும் அதனால் பாம்பு வலியிழந்து இறந்ததாகவும் கூறியிருத்தல் காண்க.

" உத்தி யரவின் பைந்தலை துமிய
உரவுருமு உரறும் உட்குவரு நனந்தலை " (அகநா - 202)

என்பதும் அக்கருத்தினதேயாதல் காண்க. " படப்பொறியை யுடைய பாம்பின் பரந்த தலை துணியுமாறு வலிய இடி இடிக்கும் அஞ்சத்தக்க பரந்த இடம் " என்பது பொருள்.

" பாம்பின் பையுடையிருந்தலை துமிக்கும் ஏற்றேடு
நடுநாள் என்னூர் " (குறுந் - 268)

என்புழியும் பாம்பின் தலையைத் துணித்தல் கூறியுள்ளமை காண்க. பாம்பினிடத்து இடிக்குள்ள பெரும் பகைமையால் அசோக மரத்தின் உயர்ந்த கிளையில் கட்டித் தொங்கவிட்டுள்ள ஊசல் கயிற்றையும் பாம்பு என மயங்கி அவ்வூசலையுடைய அசோகமரம் அடியோடு துணிபட்டு விழுமாறு இடிதாக்கிய நிகழ்ச்சியை ஊட்டியார் என்னும் புலவர்,

" ஊட்டியன்ன ஒண்டளிர்ச் செயலை
ஓங்குசினை தொடுத்த ஊசல்பாம்பென
முழுமுதல் துமிய உருமெறிந்தன்றே " (அகநா - 68)

என்று கூறியுள்ளமை காண்க. (தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Sri Amirthakateswaraswami Devasthanam
Tirukkadaiyur.

MADRAS GOVERNOR'S CAMP,
July 7, 1959.

I had the opportunity of visiting the Sri Amirthagateswara swamy temple at Tirukkadaiyur this afternoon. Myself and my wife are very grateful for the warm reception we received at the temple. The temple authorities and priests took us round and I found the temple precincts kept neat and clean. I send my best wishes to the authorities.

(Sd) BISNURAM MEDHI,
Governor of Madras.

*நாவலர் காவலர்

கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார், சென்னை.

(மலர் 18, இதழ் 8, பக்கம் 515 இன் தோடர்ச்சி)

8. மேலும், நமது சுவாமிகள் எந்நேரமும் அடியார் கூட்டத்திலிருந்தார் என்றுதானே வரலாறு பேசுகிறது! அதனுடன் அவர்கள் வாழ்ந்தது பதினெட்டு ஆண்டுகள்தானே? மேலும் அவர் எப்போதும் யாத்திரையிலிருந்ததாகத்தானே நூல் பேசுகிறது. இத்தனைத் தடைகளுக்கிடையில் சுவாமிகள் அவ்வம்மையார்களுடன் இன்பமனுபவித்திருக்க முடியுமா என்று பார்த்தால் ஒய்வே கிடைத்திருக்காது என்பது தெற்றெனப் புலப்படவில்லையா? நிற்க, சுவாமிகள் வயது 18. அப்போது உடலில் அவயவங்கள் முதிர்ச்சியடைந்து ஒரு பெண்ணோடு கூடி யின்பமனுபவிக்க முடியாது என்றும் உடல் நூலில் வல்ல மருத்துவர் கூறுகின்றார்களே?

9. துறவியாக விளங்கிய பெருமிழலைக் குறும்ப நாயனார் இவர் திருநாமமாகிய "நம்பியாரூரர்" என்ற பக்த பஞ்சாக் கரத்தை யோதியே இவருக்கு முன் கயிலை சேர்ந்தார் என்று அவர் வரலாறு பேசப்படுகின்றதே? ஒரு துறவி இவர் தம் திருநாமம் நவின்ற நலத்தாலே கயிலை சென்றார் என்றால் இவர் இல்வாழ்க்கையின் மேன்மையினைக் காட்டவில்லையா? இவ் வுண்மையைத்தானே சிவப்பிரகாச சுவாமிகளும் "துறந்த முனிவர் தொழும் பரவைதுணைவா" என்று பாராட்டி யுள்ளார்கள்.

10. ஞானசாத்திரமாகிய திருக்களிற்றுப்படியாரும் இவர் களைப் பின் வருமாறு பாராட்டியுள்ளது என்றால் என்னே இவர் தம் தூயவாழ்க்கை?

"மோக மறுத்திடின் நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத்-தோகையர்பால்
தூதாகச் செல்லவிடும் வன்றொண்டன்தொண்டுகளை
ஏதாகச் சொல்லுவேம் யாம்"

---

*தருமையாதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் 20—5—59 அன்று நிகழ்த்திய சொற்பொழிவுச் சுருக்கம்.

வீரிவஞ்சி இதனுடன் நிறுத்திக்கோள்ளுகிறேன்.

C. இனி இவர் அருளிய பாடல்களைப்பற்றிச் சில வார்த்தை களைச் சோல்லி முடித்துக்கோள்வேன். இவர் பாடிய பதிகம் முப்பத்தேட்டாயிரம் எனத் திருமுறை கண்டபுராணம் பேசும். தற்போது நமக்குக் கிடைத்துள்ளவை நூறே பதிகங்கள். இப்பதிகங்கள்தாம் "திருப்பாட்டு" என வழங்கப்பேறும். இவற்றை ஏழாந் திருமுறையாக வகுத்தனர் நம்பியாண்டார் நம்பிகள்.

(i) இப்பதிகங்கள் 17 பண்களில் அமையப்பேற்றுள்ளன. முதற் பதிகம் இந்தளப் பண்ணில் ஆரம்பமாகி இறுதிப் பண் பஞ்சமத்தில் முடிவடைகிறது. இவர் பாடிய "சேந்துருத்தி" எனும் பண்ணுனது மற்ற நாயன்மார்களால் பாடப்பேருத பண். ஆகவே இது ஒரு தனிச்சிறப்பு.

(ii) பேரியபுராண மேன்னும் காவியத்திற்கு மூலமாக அமைந்தது திருத்தோண்டத் தோகையாகும். இப்பதிகத்தில் சுவாமிகள் 63 தனியடியார்களையும் ஒன்பது தோகையடியார் களையும் சிறப்பித்திருக்கிருர்கள். இதில் இரண்டோரு நயங்கள் பார்க்கலாம். ஒரு கலையும் பயிலாத கண்ணப்ப நாயனுரைக் "கலைமலிந்த சீர் நம்பிகண்ணப்பர்" என்றும், பிறந்தபோதே கண்காணுது தோன்றிய தண்டியடிகள் நாயனுரைப்பற்றிக் கூறும்போது "நாட்டமிகுதண்டி" என்றும், "வேடமே மேய்ப் போருள் எனத் தோழுது வேன்ருர்" எனப் பேசப்பேற்ற மேய்ப் போருள் நாயனுரைக்கூற வந்த விடத்து "வேல்லுமாமிக வல்ல மேய்ப்போருள்" என்றும் பேசியுள்ளதைப் படித்து இன் புறுவோமாக!

(iii) பல பாட்டுக்களில் திருக்குறள் கருத்தையும் ஆண் டுள்ளார் என்பதற்குச் சில சான்றுகள்.

"அகர முதலின் எழுத்தாகி நின்ருய்"
—திருநேல்வாயிலரத்துறை, பாட்டு. 7

"ஓடு புனற்கரையாம் இளமை உறங்கி விழித்தால் ஒக்குமிப்பிறவி"
—திருநேல்வாயிலரத்துறை, பாட்டு. 4

(iv) நகைச்சுவை தரும் பாடல்களுள் சில :

" வாரமாகித் திருவடிக்குப் பணிசெய் தொண்டர் பெறுவதென்னே
ஆரம் பாம்பு வாழ்வதாரூர் ஒற்றியூரேல் உம்மதன்று
தாரமாகக் கங்கையாளைச் சடையில்வைத்த அடிகள் உந்தும்
ஊரும்காடு உடையும் தோலே ஓணகாந்தன்றளியுளீரே "

—திருவோணகாந்தன்றளி பாட்டு 9

" ஒற்றியூ ரென்ற ஊனத்தினு லதுதானே
அற்றப்பட ஆரூரதென் றகன்றுயோ
முற்று மதிசூடிய கோடிக் குழகா
எற்றுல் தனியே இருந்தாய் எம்பிரானே "

— திருக்கோடிக்குழகர், பாட்டு. 7

* * *

" கழித்தலைப்பட்ட நாயதுபோல ஒருவன் கோல்பற்றிக்
கறகற இழுக்கை
ஒழித்து நீ அருளாயின செய்யாய் "

— திருவெற்றியூர் தக்கேசி பாட்டு 5

* * *

" அகத்தில் பெண்டுகள் நான் ஒன்று சொன்னுல்
அழையேல்போ குருடா எனத்தரியேன்
முகத்தில் கண்ணிழந்து எங்ஙனம் வாழ்கேன்
முக்கணு முறையோ மறையோதீ "

— திருஒற்றியூர், தக்கேசி, பாட்டு. 9

" பொன்னவிலுங் கொன்றையினுய் போய்மகிழ்க்கீழ் இருவென்று
சொன்னஎனைக் காணுமே சூளுறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே இங்கிருந்தாயோ என்ன
வுன்னலரைக் கண்டாற்போல் உளோம்போகீர் என்றுனே "

— திருவெண்பாக்கம், பாட்டு. 4

(v) திருப்பாண்டிக்கொடுமுடித் தலத்தில் இவர் பஞ்சாக்கரத்தைச் சிறப்பித்துப் பாடியருளிய திருப்பதிகம் சாலச்சிறந்த ஒன்று.

(vi) பல நாயன்மார்களையும் தமது பதிகங்களில் குறித்துள்ளார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சண்டேசுரர், நரசிங்கமுனையரையர், கலிக்காம நாயனார், திருநாளைப்போவார், கணம்புல்லர், சாக்கியர், கோச்செங்கட்சோழர், புகழ்த்துணையார் முதலியோர் ஆவார்கள்.

திருஅரிசிற்கரைப்புத்தூர் பாட்டு 6; திருக்கலயநல்லூர் பாட்டு 3; திருநாவலூர் பாட்டு 11; திருப்புன்கூர் பாட்டு 3, 4; திருநின்றியூர் பாட்டு 1;

(vii) புராணக்கருத்துக்களை மிக மிக அழகாக அருளிச்செய்துள்ளார்கள் நமது சுவாமிகள். உதாரணமாக ஒரு பாட்டு மட்டும் கூறுகின்றேன். கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் தாம் அருளிச்செய்த கந்தபுராணத்து உற்பத்திக் காண்டத்தில் பார்ப்பதிப்படலம், மோனநீங்குபடலம், தவம்காண் படலம், மணம்பேசுபடலம், வரைபுனைபடலம், திருக்கல்யாணப்படலம் எனப் பல படலங்களில் விரிவாகக் கூறியுள்ள உண்மைகளை நமது சுவாமிகள் திருக்கலயநல்லூர்த் தேவாரம் முதல் பாட்டில் எவ்வளவு நயமாகப் பாடியுள்ளார் என்பதைப் படித்து என்றும் இன்புறலாமே !

“ குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன்..........

• • •

(viii) இனி யோகத்தைப்பற்றி ஒரு சான்று :

• • •

“ நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல் ”
— திருவாமாத்தூர், பாட்டு. 9

(ix) சோதிட உண்மையை ஒரு திருப்பாட்டு காட்டும் :

“ மகத்தில் புக்கதோர் சனியெனக்கானாய் ” • • •

திருவொற்றியூர் - தக்கேசி. பாட்டு. 9 சிம்மராசி, மகம், பூரம், உத்தரம் முதற் பாதம் ஆக 2¼ நக்ஷத்திரங்கள் கொண்டதல்லவா ?

சுபம்.

தமிழின்பின் சென்றதிருவிளையாடல்

செஞ்சொற்கொண்டல் - வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர்,
விரிவுரையாளர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

காட்சி 1

இடம் - தமிழ்ச்சங்கம்.

உறுப்பினர் - சங்கப் புலவர்கள்.

[திருஆலவாயில் சொக்கலிங்கப் பெருமானுக்கு முன் தமிழ்ச்சங்கம் கூடியிருக்கிறது. புலவர்கள் தத்தம் அறிவுத் தேக்கத்தைக் கவியாக்குகிற கட்டம்.]

கபிலர் : கவியென்றால் இஃது அல்லவா கவி? சொல்லும் பொருளும் பருந்தும் நிழலும்போல ஒற்றுமைப்பட, கல்லும் உருகும் கனிந்த தமிழில் எழுகின்ற என் கவிதை வேகத்துக்கு இமயத்தினின்று இழியும் கங்கையின் வேகமும் ஈடாகாது !

"சேக்கர் வார்சடைச் சொக்க நாயகன்
சேந்தமிழ்ப் பாவலன் சிந்தையின் மேவி
தித்தித்திடும் புகழ் முத்தமிழ்ப் பெரியோன்
பிறவா யாக்கை சிறவா நின்ற
சோமசுந்தரன் நாமம் சொல்லிடின்
பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை
நன்றும் இல்லை தீதும் இல்லை
என்றும் இன்பம் ஒன்றும் தானே."

கோல்லிக்கிழார் : யார் எதைச் சொன்னாலும் கொல்லிகிழான் கவிதை யென்றால் கவிதைதான். ஓடிவரும் மான், இசை பாடிவரும் தென்றல், ஆடிவரும் மயில் இத்தனையும் உண்டு என் முத்தமிழ்ப் பாடலில். ஒப்புமையில்லாச் சேப்பம் உடையவை இப்புவி யதனுள் என் பாடல்கள்

மட்டுமே. குமரி முதல் வேங்கடம் வரை எனது பாடல்தான் குன்றிலிட்ட விளக்கு! இன்றல்ல, நேற்றல்ல — தமிழ் தோடங்கிய காலந்தோட்டு! ஆதிசிவன் தமிழை அகத்தி யர்க்கு அறிவுறுத்திய காலமுதல்! பலபடப் பேசுவானேன்? இதோ என் வேண்பா:

"சங்கப் புலவர்களின் சான்ருண்மை விண்டிடவே
இங்குண்டோ ஒப்பிவ் விரு நிலமே! — சங்கத்
தமிழ்ப்புலவன் எந்நாளும் தார்தாங்கி நிற்பான்
அமிழ்தம்அவன் பாடல் அறி."

பேருங்கடுங்கோ: எல்லார் கவியையும்சோல்லி இந்தப் பேருங் கடுங்கோ கவியையும் பேசிவிட முடியுமா? எனது கவிகள் காலத்தை வேல்லுபவை; இமயம் போல் - போதியம் போல் - ஈடற்ற விந்தியமாய் - இல்லை; இல்லை; இறைவன் உறையும் திருக்கயிலாயமாய் எழுந்து, உயர்ந்து, இலங்கி நிற்பது என் கவி ஒன்றே; இதயமேனும் ஓடையிலே, அன்புத் தேன்றல் இதழ் அவிழ்க்க, அருள் வண்டு ஆனந்தகீதம் பாட, மலரும் என் கவிமலர்! விரிப்பது ஏன்? இதோ விளம்புகிறேன் ஒரு கலிப்பாடல்!

"இருநிலமும் பேருகோளியும் இதழ்விரிக்கும் மலர்வணமும்
திருவுறையும் படியாயித் தேருளுலகம் முழுதேங்கும்
மருவுதலால் மனம்போங்கி மகிழ்வோடுநான் மலர்கின்றேன்
உருகுகிறேன் இயற்கைதரும் ஒளிகண்டே ஒளிகண்டே."

பேருந்தேவனுர்: நன்று; நன்று; பேருந்தேவனுர் பாடலுக்கு முன் பித்தர்களின் பாடல்களா? வேடிக்கை! வியப்பு! விசித்திரம்! கதிரவனுக்கு முன் மின்மினியா? இனிய தேன்றலின் முன் புழுதிக்காற்ரு? தோலைக! தோலைக! எனது கவியே எங்கும் தழைக! தழைக!

"கூடலார் எனதுதோளைக்
கூடலார் தோழி கேளாய்
ஆடலார்; ஆடற்கேற்ற
அழகனுர்; குழகர்; இன்பப்
பாடலார்; பழகு தேனும்
பைந்தமிழ் போன்ற என்னை
நாடலார்; நங்கை வாழி;
நவின்றனன்; வாழி தோழி!"

[ஒருவர்க்கொருவர் பிறர் கவிதையில் வெறுப்புத் தோன்ற இருத்தல்.]

கபி : என்ன பெருங்தேவரே! உமது பாடல்தான் உயர்ந்த தென்ற எண்ணமோ உமக்கு ?

பெருங் : அதிலென்ன தடை? அமுதம் உயர்ந்ததுதான்; அது தானே அமரர்க் குரியது ?

கொல்லி : தவறு, தேவரே, தவறு! உமது பாடல் அமுத மென்ருல் அமுதத்துக்கே ஒரு இழுக்கு ஐயா!

கபி : உமது பாடலில் பொருட்செறிவு இல்லை!

கொல்லி : கபிலரே! உமது பாடலும் அவ்வண்ணந்தான்.

பெருங் : எதுகையே இல்லை; மோனை ஓடிவிட்டது; தளை தவறிவிட்டது கொல்லிகிழாரே!

பெருங் : பெருங்கடுங்கோ என்ற பெயரே தவறு; உமது பாடலில் ஒட்டம் இல்லை: தேங்கி நிற்கிறது கவிதைப் பொருள்; இதுதான் கவிதையோ?

அசரீரி : சங்கப்புலவர்களே! உங்களுக்குள் வாதிட்டுக் கலங்க வேண்டாம்; சிறந்த பாடலைத் தெரியவேண்டுமானுல் இவ்வூரில் ஊமையாய்ப் பிறந்துள்ள உருத்திரசன்மனைக் கொண்டு தெளிவீர்களாக!

கபி : ஆம்; அதுதான் சரி; ஆண்டவனே! அவ்வண்ணமே செய்கிரேம்.

கொல்லி : உண்மைதான்; அவ்வாறு நம் உயர்வை நிச்சயிப்பதே சரியான முறை.

(திரை)

காட்சி 2

இடம் - உருத்திரசன்மர் வீடு.

உறுப்பினர் - தேமொழி, முதுமொழியார், உருத்திரசன்மர், சங்கப் புலவர்கள்.

முதுமொழியார் : தேமொழி ! நமது புதல்வன் உருத்திரசன்மன் எங்கே ?

தே மொழி: சோக்கநாதப் பெருமானை வழிபடப் போயிருக்கிறன், சுவாமி !

முது : (துயரத்துடன்) அன்பே ! நமது புதல்வன் தவமேன்மையால் பிறந்திருக்கிறன் ; ஆனல் அதனுள்ளும் ஒரு சிறு குறையாலன்றோ வாய்திறந்து பேசாதவனுக அவனைப் பெற நேரிட்டது !

தே : வருத்தப்படாதீர்கள் சுவாமி ! கல்விக் கடலாக அல்லவா நம் பிள்ளை விளங்குகிறன் ! அதை நினைத்து, - மனம் கலங்காதீர்கள்.

முது : ஆம் தேமொழி ! வாய் பேசாமல் இருந்தாலும் எல்லாக் கலைகளையும் கற்று, நல்ல புலவனுக விளங்கும் திருவருள் வாய்ப்பு அவனுக்கல்லவா கிடைத்தது ?

தே : சுவாமி ! திருவருள் பாலையை மருதமாக்கும் ! மண்ணை விண்ணாக்கும் ; நரியைப் பரியாக்கும் ; பரியை நரியாக்கும் என்பது எல்லாம் அறிந்த தாங்கள் அறியாததா ?

முது : ஆம் அன்பே ! அவனருள் விளையாடலை அறிவார் யார்? ...அதோ நம் செல்வன் ! கண்ணே ! உருத்திரசன்மா ! இங்கு வா !

தே : வா, என் கண்ணே ! வழிபாடு முடித்தாயா ?

உரு : (ஊமைக்குரிய ஒலிக்குறிப்பு.)

முது : சோக்கநாதப் பெருமான்பால் நம் செல்வனுக்குத்தான் எவ்வளவு பக்தி !

தே : வழிவழி வந்த பக்தி இவன் இரத்தத்தோடு கூடிய தில்லையா, சுவாமி ! தாங்கள் சிறந்த சிவபக்தர் ; தங்கள் திருமகனுகிய இவனும் அவ்விதமே ; இதிலென்ன வியப்பு ?

முது : தேமொழி ! நீயும், இத் திருவருட் குழந்தையும் நான் முன் பிறவிகளிற் செய்த புண்ணியத்தின் திரட்சிதான்.

(சங்கப் புலவர்கள் வருதல்)

கபி : வணக்கம் முதுமோழியாரே !

முது : வரவேண்டும் புலவர் பெருமக்களே வரவேண்டும் ; தங்களது வரவால் என் குடிசை புனிதம் அடைந்தது !

கோல் : முதுமோழியாரே ! தங்கள் திருமகனுர் உருத்திர சன்மனுர்க்கு எங்கள் உளங்கனிந்த வணக்கங்கள்.

பெருந் : ஆண்டவன் எங்கள் கலகம் தீர்த்து, உயர்ந்த பாடல் இதுவென்றுரைக்க உங்கள் உத்தமப் புதல்வரே உகந்தவர் என்று நேற்று அசரீரியாக அருளினுன் !

முது : அப்படியா ? சோக்கலிங்கப் பெருமானே ! என்னே உன் பேரருள் ! புலவர்களே ! அப்படிச் சோக்கர் விருப்பம் இருக்குமானுல் குறுக்கே நிற்க நான் யார் ?

தே : குழந்தாய் ! (அணைத்துக்கொள்ளுதல்).

கபி : வெளியே பல்லக்கு நிற்கிறது ; விருதுகள் நிற்கின்றன ; உருத்திரசன்மனுரே ! எழுந்தருளவேண்டும்.

(செல்லுதல்) (தொடரும்)

மெய்ஞ்ஞானச் செல்வர்கள்

திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்
கருப்பக்கிளர்.

(மலர் 18, இதழ் 8, பக்கம் 498 இன் தொடர்ச்சி)

உ. முருகம்மையார்

முருகம்மையார் எனப்பெயரிய இவ்வம்மையார் பாண்டி வளநாட்டிலே கூடற் குடவயினுள்ள திருப்பரங்குன்றத்திலே வைசியர் குலத்திலே தோன்றி நற்கீரர் காலத்திற்கு முன்னர் வாழ்ந்திருந்தவர். இவருடைய தாய் தந்தையர் மக்கட் பேரில்லாமல் நெடுங்காலம் வருந்தி முருகப்பெருமானைப் போற்றி வழிபட்டனர். முருகன் திருவருளால் பெண் மகவு ஒன்று தோன்றியது. ஆண்மகவு தோன்றினும் பெண்மகவு தோன்றினும் முருகப் பெருமானுடைய திருப்பெயரே இருத்தல் வேண்டுமென்று முடிவு செய்திருந்த தாய் தந்தையர் குழந்தைக்கு முருகம்மை என்று பெயரிட்டனர்.

முருகம்மையார் வளர்ந்து கல்வி கற்றுச் சிறப்புற்று விளங்கினார். இயற்கையாகவே முருகக் கடவுளிடத்தில் பேரன்பு அமைந்திருந்தது. அடிக்கடி "முருகா முருகா" என்று கூறுதலை மேற்கொண்டிருந்தனர். அம்மையாருடைய முருக அன்பு நாளும் பெருகி வளர்ந்தது. தாய் தந்தையர் இதைக்குறித்து மகிழ்வே கொண்டனர். ஆயினும் உற்றார் உறவினர் இப்பெண் துறவிபோல் தெரிகிறதே; இதனை நம் பிள்ளைக்கு மண முடித்தால் வாழ்க்கை நன்கு நடைபெறுமா என்று எண்ணமிட்டவராய் மணம் பேசத் துணியாமல் இருந்தனர்.

இறுதியில் ஒரு குடும்பத்தினர் தம்முடைய பையனுக்கு முருகம்மையை மணஞ்செய்தனர். முருகம்மையினுடைய போக்கை அவளுடைய கணவன் ஒரு பொருட்படுத்திலன். வாழ்க்கையை இனிது நடத்திக்கொண்டிருந்தான்.

முருகம்மை வாழ்க்கைப்பட்டிருந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டிலே முருகன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந் தான். அவன் நல்லறிவு கைவரப்பெருதவன். முருகம்மை அடிக் கடி 'முருகா முருகா' என்று மொழிதலைக்கேட்டு இவள் நம்மிடத் திலே காதல் கொண்டிருப்பாள் போல் தெரிகிறது. கவனிக்க வேண்டும் என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான்.

குறுகிய மனப்பான்மையும் தீக்குணமும் வாய்ந்த சிலர் முருகம்மையின் கணவனிடத்தில் இல்லாததும் பொல்லாதது மான வழுவுரைகள் பலவற்றைக் கூறி ' உன்மனைவி பக்கத்து வீட்டில் உள்ள முருகனேடு கூடா நட்புக் கொண்டிருப்பாள் போல் தெரிகிறது, கருத்துடன் இரு '' என்று கோளுரைகள் கூறினர். முருகம்மையின் கணவன் முதலிற் பொருட்படுத்தா திருந்தானுயினும் நாளடைவில் முருகம்மையினிடத்தில் ஐயங் கொண்டனன். ''இனிமேல் நீ முருகன் என்று சொல்லக் கூடாது'' என்று பலமுறை கண்டித்துரைத்தனன். பழக்க வாசனை எளிதில் அகலுமோ ? அம்மையார் அடிக்கடி அம் மொழியை உரைத்துக்கொண்டே இருந்தனர். ஒருநாள் அம்மை யார் ''முருகா முருகா'' என்று கூறியபோது பக்கத்து வீட்டில் இருந்த முருகன் இதுதான் சமயம் என்று விரைவாக ஓடிவந்து, ''இதோ வந்தேன் ஏன் ?'' என்று கேட்டான். வெளியே சென்று திரும்பிய கணவன் தன் மனைவியினிடத்தில் முருகன் நின்றுக் கொண்டிருத்தலைக் கண்டான். அவனுக்கு அளவு கடந்த சினம் உண்டாகியது.

வீட்டிற்குள்ளே விரைந்தோடினன், கத்தியென்றைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தான். பக்கத்துவீட்டு முருகன் அஞ்சிப் பறந்தோடிப் போனுன். முருகம்மையின் கணவன் முருகம்மை யின் கையை வெட்டிவிட்டான். வெட்டிவிட்ட கை கீழே விழுந்தது. முருகம்மையோ ''முருகா ! முருகா !! முருகா !!!'' என்று கூறியவாறே கண்ணீர் சிந்தி நின்ருள் '' முருகா ! என் முன்தோன்றி என் கையை வளர்ந்தருளச் செய்யவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டாள். இதனைக்கேட்ட முருகம்மையின் கணவன், ''முருகன் உன்முன் வந்து உன்னுடைய கையை வளரச்செய்து விட்டால் நீ ஒழுங்கானவள்தான்'' என்று கூறி ஞன். அதே கணத்தில் முருகக் கடவுள் கோலமாமஞ்ஞைமீது

வள்ளி தெய்வானையம்மையார் புடைசூழ முருகம்மையாருக்குக் காட்சி வழங்கினுர். அம்மையாருடைய கை பழமைபோல் வளர்ந்து விளங்கியது.

முருகம்மையாருடைய கணவனும் முருகம்மையாரைத் தன்னுடைய மனைவியாகப் பெற்ற மாண்பினுல் முருகக் கடவுளைத் தன்னுடைய கண்களாலே இனிது கண்டனன். அவனுக்கு அப்போழுதே மெய்யறிவு தோன்றியது. கடவுள் காட்சியைக் கண்ட பிறகும் ஒருவருக்கு மெய்யறிவு தோன்ருமல் இருக்குமா ? தன்மனைவியைவிட அன்றுமுதல் பெரிய பக்தனுன். இருவரும் நெடுங்காலம் முருகக் கடவுளைப் போற்றிக் கோண்டிருந்து அப்பெருமானுடைய திருவடிநிழலை அடைந்தனர்.

இவ்வம்மையாருடைய வரலாற்றுக் குறிப்பை நக்கீரனுருஞ் சுட்டிக்காட்டியிருத்தலால் இவ்வம்மையார் நக்கீரர்க்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்திருந்தவர் என்பது நன்கு பேறப்படுகிறது. இவ்வம்மையாரின் வரலாற்றுக் குறிப்புக்கள் நூல்களிற் சில விடங்களில் காணப்படுவதோடு சேவிவழிச் சேய்தியாகவுங் கேட்கப்படுகின்றன.

" ஒருமுருகா என்றன் உள்ளங் குளிர உவந்துடனே
வருமுருகா என்று வாய்வெருவா நிற்பக் கை இங்ஙனே
தருமுருகா என்றுதான் புலம்பா நிற்பத் தையல் முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே "

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபரசுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்சேய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

நன்றி

சித்தாந்தச் செல்வர்
திரு. அ. நா. ப. திருஞானசம்பந்தனுர் அவர்கள்
திருவண்ணுமலை

(மலர் 18. இதழ் 8. பக்கம் 507 இன் தொடர்ச்சி)

நயவஞ்சகர்களுக்கு நன்றி நண்ணுமா ?

தந்திரத்தையே தன் அணிகலனுகக்கொண்டு வாழ்கின்றது. நரி; பொறுமையின் பொக்கிஷமாக வாழ்கின்றது கொக்கு; பெருமிதத் தன்மையோடு தண்ணிய நினைவு கொண்டு வாழ்கின்றது யானை. தந்திரங்கொண்ட நரியினையொத்தவன் நப்பாசை பிடித்த நயவஞ்சகன். பொறுமையின் சின்னமான கொக்கை யொத்தவன் ஒரு நேர்மையற்ற வழக்காளி. ஒரு பெருமிதங்கொண்ட யானையை நிகர்த்தவன் ஒரு தவயோகி, நரிச் செயல் பூண்டார்க்கும், கொக்கின் செயல் இயைவார்க்கும், நன்றி நேராது. யானையை யொத்தவர்க்கு நன்று என்றும் நிலைபெறும். நயவஞ்சகன் தானும் வாழ விரும்பான்; பிறரையும் வாழவிடமாட்டான். பிறன் இன்னல் அனுபவிக்குங்கால் கண்டு இரங்கான்; ஆனுல் மகிழ்வெய்துவான். தான் படுகுழி தோண்டிக்கொள்வதுமல்லாமல், பிறரையும் அதில் தோய வைப்பான். இத்தகையோர் மனமும் வஞ்சமனத்தின்பாற்படும்.

உலகில் வாழுநரை, வஞ்சிக்கின்ற மனத்தைஉடையவனது இருட்டு ஒழுக்கத்தைப் பிறர் அறிந்துகொள்ள இயலாமற் போன போதிலும், அவனது உடலாய் அவனுடன் ஒன்றிநிற்கின்ற பஞ்சேந்திரியங்களும் கண்டு, அவனைச் சிறுமைப்படுத்தி நகையாடும் என்றறிக.

" வஞ்சமனத்தான் படிற் றொழுக்கம் பூதங்கள் "
ஐஞ்சும் அகத்தே நகும். (குறள் - 271)

நயவஞ்சகன் நல்வேடப் பொலிவுடன் திகழ்வதால், நல்லோன் என்று மதிக்கவொண்ணுது. வேடப்பொலிவு எளிதில் ஒருவன் நிலையைப் படம் பிடித்துக் காட்டும். நற்சிந்தை கொண்டவனின்

வேடம் யாங்ஙனம் இருந்தால் என்ன ? சிலர் அணியும் ஆடை அவர்களின் உள்ளப் பாங்கை எளிதில் உணர்த்தும் என்பர். பலர் அணியும் ஆடை அவர்களின் வஞ்சக அறிவை அளவுடன் எடுத்துக்காட்டும். நற்றவம் பூண்டு வழுவாது நடக்கும் தவச் சிரேஷ்டர்கள் தங்கள் வேடத்தாலும் நல்லோர் எனக் காட்டுவர். காலப்போக்கிலும் அவர் வேடம் நிலைத்து விளங்கும். ஏனையோர் வேடமானது உள்ளுணர்வு "தீயதெல்லாம் ஒருங்கமைந்த தீமையாளர்' என்பதைத் தெரிவித்துவிடும். ஆடம்பரப் பொலிவு கொண்ட நயவஞ்சகனுக்கு நாட்டில் உயர்வு தோன்றுவது போலக் கண்டு மறையும். அவனுக்கு நன்றி என்றும் நிலைக்காது நன்றி நாலடி தூரத்தில் விலகியே நிற்கும் என்க!"

செய்நன்றி கொல்லாமை :

வையக வாழ்க்கையில் ஒருவன் முன்னேற, நன்மனம் பெற்றோரின் நல்லுதவி தேவையாகிறது. திரண்டசெல்வம் பெற்றோர் வாழ்க்கையில், ஏமாற்றம் கொண்டு முன்னேற்றமும் இன்றித் துருதுருவென விழித்தலைக் காண்கின்றோம். இதன் காரணம் கல்வி நலத்தான், கரைகண்ட தூயோரின் உதவி யில்லாமையேயாகும். தமிழகத்தில் கம்பநாட்டாழ்வாரை அறியாத புலவர்களும் உண்டோ ? இராமாயணம் என்றால் செந்தமிழ்நாட்டில் சிறுபிள்ளையும் கம்பனை நினைவுறுத்தும். கம்ப நாடனைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்த உதவியா யிருந்தவர் யார் ? வெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப வள்ளல் அன்றோ? அவர் இல்லாமற் போயிருந்தால் கம்பனைக் கண்டிருப் போமா ? முடியாதென்க ! வள்ளல், விண்ணையும் மண்ணையும் தம் அகமாகக்கொண்டு தம் புலமையில் மிக்குயர்ந்தவருக்குச் செய்த நன்றி சிறிதளவே எனினும் கவிமன்னரான கம்பர் வள்ளலை மறக்காமல் தம்முடைய பெருங் காவியத்தில் இட மளித்துள்ளார் எனின், கம்ப நாடரின் சிறப்பையும், வள்ளலின் காலங்கருதிச் செய்த உதவியின் சிறப்பையும் வாய்விட்டுரைக்க இயலுங்கொல் ?

> ....வெண்ணெயூர்ச் சடையன்தங்கள்
> மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி

மேற்கண்டபடி உதவி பெறுவோர் அவ்வுதவியின்தன்மை எவ்வளவு சிறப்புப் பெற்றது என்பதை அறிவர். முன்னர்தாம்

ஒருவருக்கு ஒன்றும் செய்யாமல் தமக்கு இடர் வந்துறுத்துங் காலத்துச் செய்த உதவியின் பேருமைக்குக் கைம்மாறு சீர் தூக்கின் அவர்க்கு இம்மை மறுமை இரண்டு உலகமும் நிறையாற்றல் அரிது.

பேரிய அறங்களை மாய்த்தவர்களுக்குப் பாவத்தினின்றும் நீங்கக் கழுவாயுண்டு. ஒருவர் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃதில்லை.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள் 110)

முடிவு :

தன்னலங்கருதாது, தன்னைக்காப்பாற்றி முன்னேற்றத் திற்குக் கொண்டுவந்தவர்களின் குடும்பத்தைப் பெயர் தெரி யாமல் ஒழித்தவனும், சிறப்புறப் பூசை நிவேதனம் நடைபெற்று வருங்கோவில்களில் விளக்கேரிய ஒட்டாமல் செய்தவனும், மறைமுகத்தில் இருந்து மாற்றானை வஞ்சனையால் வெல்ல வேண்டும் என்றெண்ணும் பாதகனும், செய்நன்றி கொன்றவனும் இயைவர் என்பது தெளிவு. நல்லவர்களாக நடிப்பதைவிடக் கெட்டவர்களாக இருப்பதும் சில சில நேரங்களில் நலமாகவே அமைகின்றது. கெட்டவன் கெடுதல்களைச் செய்யச் செய்ய, அவற்றிற்கு உட்படும் ஒருவன் தெளிந்து தேர்கின்றான். தீயன வற்றையும், நல்லனவற்றையும் பாகுபாடு செய்து உணர்வது தீயோர்கள் மூலம்தான்! இவர்களையும் வையகம் சுமக்கின்றது எனின் வம்புக்கா? இல்லையேயில்லை! நல்லவர்களுக்குப் புத்தி புகட்டுவதற்குத் தீய மக்களையும் உலக இயற்கை படைத் துள்ளது. தீமைக் குணங்கள் நிறைந்த ஒரு சிலரையும் இவ் வளம்மிகுந்த வையகம் படைத்துள்ளமைக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

பன்னெறி விளக்கம்

பெருநாவலர், களமூர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

நிலைக்கு வித்தாகும் புகழ்ச்சியைத் தேடுத னித்தியம்பே
ஈலைக்கு வித்தாகுந் தனத்தினைத் தேடுத லன்பின்மின்னார்
வலைக்கு வித்தாகுங் கெடுமதி யுற்றிடல் வையகத்திற்
கொலைக்கு வித்தாகுங் குறும்புத்தனஞ் செய்தல் கோற்றொடியே. 57

சவுந்தரியந்தாதி

பவளக்கொடி அடிகள்

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உளதோ யிலதோ வுருவோ அருவோ
வுறவோ பகையோ வுளமந்தோ
களவோ கனவோ மனமோ வேனுமென்
கபடங் களைநீ களையாயே
கிளையே தமரே யெனையா ளரசே
கிருபா கரியே பெருவாழ்வே
விளையே விதையே நிலமே சலமே
விரகே சிரகா ரணவீடே. 28

வீட்டைத் திறந்து ஞாட்டத்தி லேறி
வேட்டைச் சுணங்க [1] னடிகோளார்
காட்டைத் துணிந்து மூட்டிக் கனிந்த
காற்றைத் திணிந்த குழலூது
கோட்டைக் குள்வேந் தநீற்றைப் புனைந்து
கூத்துப் புரிந்த குருவேயென்
[2] மூட்டைக் களைந்து பார்த்துப் பரிந்து
மோட்சத் திருந்தே னுடையாளே. 29

கலித்துறை

ஆட்கோண் டாய்நீ யானே யாளே யானுலே
தாட்கோண் டோடி வாராய் காராய் தாய்போலே
வேட்கோன் றுரோ வாரார் மாதே வேறுநீ
கேட்குந் தாயே நாயே னுசைக் கிறையோனே 30

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இறையவனை யுற்றுமுத்தி தேரும்வகை
யினியதவ முற்றபத்தர் தேவியுனை
நிறைமலர்ப ரப்பிவைத்து நாளுமுனை
நேடியதுதி பத்திவைத்த நேயமுடன்

[1] அடிகோலார் என்பதும் பாடபேதம்
[2] மூடு - மறைப்பு.

மறைமுடிவி னுற்றசத்தி பாதம்வர
வழிவழி துறக்கமுத்தி யாகியது
சிறைமயிலை யொத்தபச்சை மேனிதனிற்
சிவனையொரு பக்கம்வைத்த சேயிழையே. 31

இழைநுழை யாதிடை யழகுறு
பூண்முலை யிளவேயின் மேனியிலே
நிழலுறு சாமன மணிவட
மாடிய நிலவேழு பூதியினுள்
கழைபெறு தோளியை யழகொழு
காநிறை கருணையி னுரமுதைத்
தொழுமவ ரேசிவ னடியவர்
காணிது சுருதியி னுலுரையே. 32

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உரையி றந்து வுணர்வி றந்தே
வுலவு மாயை யுற்றதோர்
திரையி றந்து காண நின்ற
தேசி யெந்த தேசியோ
பரையி றந்த ஞான மேப
ரிப்ப தென்ற பத்தரே
யிரையி றந்த சிந்தை யாகி
யென்று தாயை நம்புவேன். 33

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நம்பிய வடியார் கட்கு
நாரணன் காணு முத்தி
சொம்பிதத் துடனே தந்த
சோதிக்கு மரிய சோதி
யம்பிகை பரமி லோக
நாயகி யரற்கு முன்னே
கம்பித புளகஞ் செய்யக்
காண்டலோ காணு முத்தி. 34

கம்பன் கண்ட கன்னித் தமிழ்நாடு

திரு. மது ச. விமலானந்தம் எம். ஏ., அவர்கள்
தமிழ்த்துறை, சரபோஜி அரசர் கல்லூரி, தஞ்சாவூர்.

(மலர் 18, இதழ் 3, பக்கம் 188ன் தொடர்ச்சி)

ஆண்களோடு பெண்களும் :

நாட்டின் உயிர்நிலை நங்கையரின் நன்னெறியே யன்றோ? பெண்களின் பெருமித வாழ்வு கொண்டன்றோ நாட்டின் சிறப்பைச் செப்புதல் வேண்டும். செல்வத்தால் சிறப்பது நாடன்று; நாட்டுமக்கள் நல்லவர்களாய் இருந்தால்தான் நாடும் நன்னுடாகும். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்று தான் காப்பியரும் கூறினரே தவிர அறிஞர் மாட்டு என்றோ, செல்வர் மாட்டு என்றோ கூறினரில்லை. வள்ளுவரும் 'பண்புடையார் பட்டுண்டுலகு' என்றுதானே கூறுகின்றார். தமிழ் மூதாட்டியும் 'எவ்வழி நல்லவர்ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்றும் கூறுவது காண்க. ஆண்களைக்கெடுக்கும் பெண்களும் இல்லை; பெண்களைக் கெடுக்கும் ஆண்களும் இல்லை கம்பரது கனவு நாட்டில். கன்னியரின் கயலனைய கண்கள் தன் நெறியினின்றும் நீங்கிச் செல்லாவாம். ஆண்களின் ஐம்பொறிகளும் அதனதன் நிலையினின்றும் விலகிச் செல்லாவாம்.

ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்செலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம். (ஆற்றுக் 1)

ஐம்பொறி வழியே நிகழ்வதன்றோ அனைத்துக் குற்றமும், ஐம்பொறி வழியே அடங்கி மக்கள் அதன்வழிச் சென்றனரேனின் அவர்களது பண்பாட்டின் உயர்வை என்னேன்பது?

கம்பனும் கல்வியும் :

பெண்கல்வி பற்றிப் பலர் பலவாறு பேசக் காண்கின்றோம். புரட்சிக் கவி பாரதியும் :

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள் பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்

என்று பாடுகின்றார். 12ம் நூற்றாண்டிலேயே கம்பன் பெண் கல்வி பற்றிப் பேசுகின்றான் பாருங்கள் : பொருட் செல்வமும் கல்விச் செல்வமும் களிநடம் புரிகின்றனவாம் கன்னித்தமிழ் நாட்டில் ; தமிழ்க் காவியங்களில் இல்லாத இத்தனிச் சிறப்பு கம்பன் காவியத்தில் காண்கின்றோம் :

பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே. (நாட்டு 36)

அழகோடு அருங்குணமும் பெற்றிருந்தனராம் நங்கையர். மகளிர் விருந்தெதிர் கோடலும், அயலவர்க்கு அளிக்கும் அழகையும் கூறுகின்றான். கற்றல் மட்டும் போதுமா ? கேட்ட லும் வேண்டுமன்றோ !

ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
யாகம் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலுமன்றே(நகர - 75)

இங்ஙனம் எல்லோரும் கல்வி பெற்றால் எல்லாம் இன்ப மய மாகவே அமையுமன்றோ ?

செல்வத்துட் செல்வம் :

செல்வத்துட்செல்வம் செவிச்செல்வம் என்றார் வள்ளுவர். கம்பனும் கற்றலைவிட கேட்டலில் உள்ள எளிமையையும் இனிமையையும் எண்ணி, தனது கனவு நாட்டில் கேள்விச் செல்வமே நிறைந்திருந்ததாக,

மருந்தினும் இனிய கேள்வி செவியுற மாந்து வாரும் (நாட்டு-15)
காதைகள் சோரிவன செவிநுகர் கனிகள் (நாட்டு-51)

எனக் கூறுகின்றார். செவியேற்ற இடங்களை யறிதல் வேண்டு மன்றோ? எனவேதான் கம்பனும், கலைதேரிகழகமும், பட்டி மன்றங்களும் பலவிருந்ததாகக் கூறுகின்றார்.

முன்னரு மருமறை யோது மண்டபம்
பன்னருங் கலைதேரி பட்டி மண்டபம் (நகரப் - 62)

கல்வி பற்றிய கம்பன் கருத்துரைகள் கண்டோம்.

இல்லையும் இன்மையும் :

இனி, செவிச் செல்வமும் புவிச் செல்வமும் நிறைந்து விட்டால் மட்டும் நாடு நல்ல நாடாகுமா? கோலை, களவு முதலியனவும் இருத்தல் கூடாதன்றோ? ஒரு பக்கம் வளமும், ஒரு பக்கம் வறுமையும், ஒரு பகுதியில் ஓங்கிய நலமும், மற்றொரு பகுதியில் குறை பலவும் நிறைந்திருந்தால் நாடு நாடாகுமா? எனவேதான் கம்பன் 'இல்லை'ப் பாட்டு பாடு கின்றான். ஆனால் நாம் இல்லைப் பாட்டு பாடுவதற்கும் கம்பன் பாடுவதற்கும் வேறுபாடு உண்டு! எல்லோரும் ஓர் நிறையும், எல்லா இல்லங்களும் ஒரே வித உயர்வும் பெற்றிலங்குவதாகக் கூறுகின்றார். வறுமை இருந்தாலன்றோ வாரிவழங்கும் வண்மை விளங்குவதற்கு, போர் இருந்தாலன்றோ வலி வெளிப்படு தற்கு, போய் பரவினாலன்றோ உண்மையின் உயர்வு தெரிதற்கு; வறுமையும் இல்லை, எனவே வண்மையும் இல்லை, போய்யும் இல்லை, எனவே மெய்யும் இல்லை.

வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற்
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபோய் யுரையி லாமையால்
*ஒண்மை யில்லைபல் கேள்வி யோங்கலால். (நாட்டு - 53)

அறியார் பலர் இருந்தாலன்றோ அறிஞரேன ஒருவர் விளங்கு தற்கு. கல்லார் எவருமிலர், எனவே கல்வி வல்லாரும் காணப் பட்டிலர் என்பதைக்,

கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்லாரல் லாரு மில்லை (நகர - 74)

எனப் பாடுகின்றான் பாவின்வேந்தன்.

---

* முன் மூன்றடிபோல் அமைந்திலது.

இதுகாறும் பன்னிரண்டாம் நூற்ருண்டின் இருபெரும் புலவரைப் பற்றியும், அவர்களிலே கம்பன் கனவு நாட்டிலே, மேகமும் மலையும் மருத நிலத்தை மாண்புறச் செய்ததும், வயலும் வளமும் அறிந்து, காண்பன கண்டு, கேட்பன கேட்டு, உயிரினங்களின் உயரிய வாழ்வுகொண்டு மக்களின் மாட்சிமை தெளிந்து, பொழுதுகழிந்த பான்மை யறிந்து, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்ந்ததும், கல்விச் சிறப்பும் கேள்விச் செல்வமும் கண்டு கம்பன் பாடிய 'இல்லைப் பாட்டை' யும் செவிமடுத்து இனிது மகிழ்ந்தோம். இனி நாட்டின் நிலையையும், நாடாள் வேந்தன் திறத்தையும் காண்போம்.

நாட்டின் நிலை :

செல்வம் கொழித்திருக்க அதே தருணத்து கள்வரும் மிகுந் திருப்பின் செல்வம் இருந்தென்ன ? இல்லாதிருந்தென்ன கள்வரிலாமைக்குக் காவலனன்ருே பொருப்பாளி ! எனவேதான் கம்பன்,

கள்வா ரிலாமைப் பொருட்காவலு மில்லை யாதுங்
கொள்வா ரிலாமை கொடுப் பார்களும் இல்லைமாதோ.
(நகர - 73)

கல்விச் செல்வத்தில் மட்டுமன்று பொதுவுடைமை; பொருட் செல்வத்திலும் பொதுவுடைமை பேசுகின்ருன் கம்பன். இங்கு பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சிறந்துளதாகக் கூறப் படும் உருசிய நாட்டையும் கடந்து செல்கின்ருன் கம்பன் :

எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்தலாலே
இல்லாரு மில்லை யுடையார்களு மில்லைமாதோ (நகர.- 74)

எல்லோரும் வேண்டியன பெற்றிருந்தமையால் யார் உடையார் ? யார் இல்லாதவர் என்று எப்படிக் காண இயலும் ? ஏன் ? நிறைய பெற்றிருந்தும் மனநிறைவு இன்மையால் மாற்ருர் பொருளையும் கவர விரும்புவோர் இவ்வுலகில் உண்டன்ருே ? இவ் ஐயம் எழாதிருக்கவே 'கள்வா ரிலாமையால்' என்று கூறி விட்டான் கம்பன்.

கம்பனும் காவலனும் :

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை யன்ருே? அவ்விறை பற்றிக் கம்பன்கொண்ட கொள்கையும், தாம்

கண்ட நாட்டின் மன்னன் இத்தகையோன் என எண்ணியதும் கம்பனது அரசியல் அறிவைக் காட்டுகின்றது. பண்டைத் தமிழர் கோள்கை நாட்டின் உயிர் நாடாள் வேந்தன் என்பதே. இதனை

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்கு கடனே. (புறம்-186)

என்ற பாடல் எடுத்தியம்புவது காண்க. ஆனால் கம்பன் செய்த செயற்கரிய புரட்சி: நாடாள் மன்னனை உடலாக்கி, நாட்டு மக்களை உயிராக்கியமையே,

வயிரவான் பூணணி மடங்கன் மொய்ம்பினான்
உயிரெலாந் தன்னுயிர் ஒப்ப ஓம்பலாற்
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான். (அரசியற் 10)

அத்தகைய அரசன் அனைவர்க்கும் பயன்பட வாழ்தல் வேண்டும். கைம்மாறு வேண்டா கடப்பாட்டால் குறிப்பறிந்து செய்வதில் தாயாகவும், அவர்கட்கு நலம்பயப்பதில் குடிகள் செய்தவமாகவும், அனைவர்க்கும் முன்னின்று வழிகாட்டுமாற்றான் சேயாகவும், குற்றங் கடிவதில் நோயாகவும், அருளாட்சியால் மருந்தாகவும், அரசியல் ஆராய்ச்சியில் அறிவொளியாகவும் அமைந்து பண்பாடனைத்தும் பெற்றிலங்கவேண்டுமென்கிறார் கம்பர்.

தாயொக்கும் அன்பிற் றவமொக்கும் நலம்பயப்பிற்
சேயொக்கும் முன்னின்று ஒருசெல்கதி யுய்க்குநீரால்
நோயொக்கும் என்னின் மருந்தொக்கும் நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான்
(அரசியற் - 4)

இன்னும் நாடாள் மன்னன் நெறியினை,

முறையறிந்து அவாவை நீக்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந்து உயிர்க்கு நல்கும் இசைகெழு வேந்தன். (நாட்டு-19)

எனவும் கூறுகின்றான் கம்பநாடன்.

இறுதியுரை :

கம்பன் கண்ட காவலனும், அன்னவன் படைத்த கன்னித் தமிழ் நாடும் என்று இம்மண்ணிடைத் தோன்றுகின்றதோ அன்றே நாடும் ஏடும் நலம்பெறும் நன்னாளாகும்.

உடல் வளர்க்கும் மூலிகைகள்

திரு. V. பலராமையா B., A., B. L., அவர்கள்,
District Magistrate, Cuddalore.

கீழ்க் குறிக்கப்பட்ட எந்த மூலிகையானாலும் சரி, பாலர் களுக்கும் தாராளமாய்க் கொடுக்கலாம். குழந்தைகள் வனப்பாய் வளருவார்கள். வியாதியற்று இருப்பர். பெரியோர்களுக்குக் குறிப்பிட்ட அளவுக்கு அரைபங்கு அதிகம் கொடுக்கலாம்.

கற்பங்களில் எதுவானாலும் சரி, ஒரு வருடமாவது கொண் டால்தான் சொல்லிய பலனையடையலாம். புளி, உப்புதள்ளி, கற்ப ஆகாரம் மேற் சொன்னபடி உண்டு கற்பங்களைக்கொள்ள நிச்சயமாய் சித்தர்கள் சொல்லியபடி பல வருடங்கள் ஆரோக்ய மாயும், ஆனந்த சரீரத்தையும் பெற்று வாழலாம்.

நயன சுத்தி :

கரிசாலையை இடித்து பிழிந்த ரசம் படி $\frac{1}{8}$, பசு நெய் படி $\frac{1}{8}$, இவ்விரண்டையும் கலக்கி அடுப்பேற்றி மெழுகு பதமாய்க் காய்ச்சி இறக்கி வாயகன்ற மூடியுள்ள ஜாடி அல்லது பீங்கான் பாத்திரத்தில் வைக்கவும். இதில் கொஞ்சம் விரலில் தொட்டுக் கொண்டு தொண்டைக்குள் சிறு நாக்கில் படும்படி உழட்டிவிட வேண்டும். இவ்விதம் செய்து கழுத்தைக் குனிந்து வாயைத் திறந்து வைத்தால் நார்போன்று ஈளைவந்துவிடும். இந்த சுத்தி பிரதி தினமும் செய்தல் வேண்டும்.

மூல சுத்தி :

சோற்றுக்கற்றாழை மடல்களை நெடுக்கு வாட்டில் இரண்டி ரண்டாக வெட்டி அதை ஒரு குழிக்கல்லில் வைத்து மேல் கல்லால் தேய்க்க சோறும் ஜலமும் வரும். அந்த ஜலத்தில் படி $\frac{1}{8}$. விளக்கெண்ணெ படி $\frac{1}{8}$, இரண்டும் பாத்திரத்திலிட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி இறக்கி வாயகன்ற புட்டியில் வைக்க வும், பிரதிதினமும் விரல்களில் அந்த எண்ணெயைத் தடவிக் கொண்டு மூலத்தினுள் சுழற்றவேண்டும். இப்படிப் பல நாட்கள் செய்துவர பழைய மலமெல்லாம் இறங்கி சரீரம் பரிசுத்தமாகும். இத்துடன் மூலிகைகளின் குணானுபவத்தை எழுதத்தொடங்கு வோம்.

கடுக்காய் :

Eng :- Chebulic Myrobalan. Tel :- Karakaya. Mal :- Katukkai. கடுக்காயில் பலவித கடுக்காய்கள் இருக்கின்றன. அவை வரிக்கடுக்காய், சிவந்திக் கடுக்காய், சேங் கடுக்காய் முதலியன. இவைகளில் சேங்கடுக்காயே கற்பத்தில் உயர்ந்தது.

“ சுத்தியோடு புத்தி சுகமும் புகழு முண்டாம்
மேத்தவோளிர் போன்னிறமாம் மேனியேல்லாம் - சுத்தகப
வங்கடுத்த வீளைபல வன்காச மும்மலமும்
சேங்கடுக்காய்க் கில்லை யேனத் தேர் ”

என்றபடி பல வியாதிகளை நீக்குவதன்றிச் சரீரத்தில் போற்சாயல் உண்டாமேன்க. இதற்கு சம்ஸ்கிருதத்தில் “ வசீகரா ” என்ற பேயர் கோண்டுள்ளதேன்பதிலிருந்து அதில் சரீரத்திற்கு வசீகரத்தைக் கோடுக்க வல்லமையுடையதேன்பதைத் தேரிந்து கோள்ளல் வேண்டும்.

கடுக்காய்க் கஷாயத்தையே தோலைப்பதனம்சேய்து பிரகாசம் உண்டாக்க உபயோகிக்கிறார்கள். நம் முன்னோர்கள் கட்டிய கோயில்களிலும் வீடுகளிலும் இக்கடுக்காய் நீரை உபயோகித்துள்ளனர். சுண்ணும்புக் கலவையில் கடுக்காய் கஷாயம் விட்டுப் பிசைந்து மேடைகள் கட்டுவதை நாம் பார்த்திருக்கிறோம். இதனால் கட்டிடம் இறுகி நூற்றுக்கணக்கான வருஷங்கள் இருக்கக் கூடிய பலத்தைப் பேறுகிறது. இந்த அனுபவ உபயோகங்களால் நாம் அறிவது (1) சரீரத்தை இறுக்கும், போற்சாயல் உண்டாக்கும் என்பது, சித்தர்கள் இதை முதற் கற்பமாகவே எடுத்துள்ளனர். அதற்கு முக்கியமான காரணம் நம் குடலுக்குள் இருக்கும் பழைய மலத்தையும், அழுக்கையும் படிப்படியாக அகற்றி உடலைத் தேற்றுகிறது. இக் கடுக்காயைப்பற்றி முழுதும் எழுதுவதானால் ஒருத் தனிப்புத்தகம் வேண்டும். தேரையர் (பதினேண் சித்தர்களில் ஒருவர்) சுருக்கமாக சோல்லியதை மாத்திரம் இங்குக் குறிப்பிட்டுவிட்டு நிறுத்துவோம். “ காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் மண்டலமுண்டால் கோலை ஊன்றிக் குறுகி நடப்பவன் கோலை வீசி குலுக்கி நடப்பனே ! ”

தயார் செய்யும் முறை :

சேங்கடுக்காய் நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும், விலை குறைவு. ½ அல்லது 1 வீசை வாங்கி ஒரு நாள் உலர்த்தி தட்டி, மேல் தோலை உறித்து உள்ளிருக்கும் கொட்டையை எரிந்துவிடவும். ஷை தோலை சோற்றுக்கற்ருழை நீரில், அல்லது அரிசி கழுவிய நீரில் மூன்றுநாள் ஊறிய பிறகு எடுத்து நன்ருய் உலர்த்தவும். பிறகு அதனை இடித்துத் தூளாக்கி ஒரு பாத்தி ரத்தின் வாயிற்கு சன்னமானதுணி இறுகக்கட்டி போடியைக் கோஞ்சம் கோஞ்சமாய் அத்துணியின் மேலிட்டு விரல்களால் தேய்க்க சன்னமான போடி இறங்கும். அதற்கு வஸ்திரகாய மேனப்படும். பிறகு 5 பலம் போடிக்கு ஒரு பலம் கடையில் விற்கும் இந்துப்பை வாங்கிப் போடிசெய்து, வாணலில் சிறு நேருப்பில் ஈரம்வற்ற வருத்து இரண்டையும் கலக்கி சீசாவில் அடைக்கவும்.

சாப்பிடும் அளவு :

படுக்கைக்குப் போகுமுன் ஒரு டீஸ்பூன் வாயில் கோட்டி ஒரு கோப்பை ஜலம் சாப்பிடவும். இதில் துவர்ப்பு இருப்பதால் வாயில் பிசறுவது போலவும் பழக்கமில்லாதவர்க்கு வேறுப்பை யும் உண்டாக்கக்கூடும். உபயோகித்துக்கோண்டேபோனுல் நாளடைவில் கஷ்டமிராது.

முக்கிய கவனிப்பு :

காலையில் நன்ருக மலசுத்தியாகும். அதிக பேதியானுல் போடியைக் குறைத்துக்கோள்ளலாம். குறைந்தால் அதிகப் படுத்திக்கோள்ளலாம். இதற்கும் மல சுத்தியாகாத சரீரங் களும் சில உண்டு. அவர்கள் இன்னேருபலம் இந்துப்பைக் கூட்டிக்கோள்ளுதல் நலம். மலச்சிக்கல் மூலவியாதி உள்ளவர் களுக்கு இது ஓர் சஞ்சீவி என்றே சோல்லலாம். மலக் குற்றத்தை நீக்கி உடலையும் தேற்றக்கூடியதாகையால் இதைத் தாயினும் மேம்பட்டதேன முதியோர் கூறியிருக்கின்றனர்.

இல்லறத்தோற்கு இது உகந்த கற்பமன்று என சிலரிடை அபிப்ராயம் இருந்து வருகிறது. அது ஆதாரமற்றது. நான்

அடிக்கடி கடுக்காயை உபயோகித்து வருகிறேன். இல்லற வாழ்க்கையில் ஒருவித மாறுதலும் கிடையாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தக் கடுக்காய் சூரணத்தை பலருக்கு நான் கொடுத்திருக்கிறேன். வாத சரீரமாயும், நீர் ஏற்றம் கொண்டு அதீக ஸ்தூலமாய் இருந்த ஒருவர் ஒரு வருடம் விடாமல் சாப்பிட்டார். அவருடைய உடல் கால்பங்கு குறைந்துவிட்டது. மற்றும் ஒரு வருடம் உட்கொண்டார். மற்றும் கால்பங்கு குறைந்து உடல் இருகிக்காட்டிற்று. இன்றும் அவர் விடாமல் சாப்பிட்டு வருகிறார்.

தலையின் பின்பக்கமும், பக்கங்களிலும் மதமதப்பு கொண்டு பலவருடங்கள் எந்த மருந்துக்கும் பலனடையாத ஒரு சப் ஜட்ஜியை இக்கடுக்காய் சூரணத்தை ஒரு வருடம் சாப்பிடச் செய்தேன். ஆறு மாதங்களுக்கெல்லாம் மதமதப்பெல்லாம் மறைந்து போயிற்று. ஆனாலும் அதைவிடாமல் சாப்பிட்டு வருகிறார். அவரும் இம்மருந்தைப் பலருக்கு சொல்லி குன்மம் முதலிய வியாதிகள் குணமடைந்திருக்கின்றன.

சூரணம் செய்து சாப்பிட முடியாதவர்கள் ஒரு காயின் பாதி தோல் படுக்கைக்கு போகும் நேரத்தில் வாயிலிட்டு மென்று கொஞ்சம் கொஞ்சமாய் ரசத்தை விழுங்கி ஒரு அவுன்ஸ் ஜலத்தை சாப்பிடலாம். காலையில் நல்ல மல சுத்தியாகும்.

வெகு சுலபமான இம்மருந்தை விட்டு விலையுயர்ந்த இங்கிலீஷ் மாத்திரைகளும் (Milk of Magnesia) மில்க் ஆப் மேக்னிஷியா முதலிய பாஷாண மருந்துகளை சாப்பிடுவோரின் நிலைமை துக்ககரமாயிருக்கிறது.

குழந்தைகளுக்குப் பிஞ்சுக் கடுக்காயைத் தூளாக்கி ஜலம் விட்டு கருப்பட்டி என்னும் பனைவெல்லமிட்டு காய்ச்சி வயதிற்கு தகுந்தவாறு ஒன்று அல்லது இரண்டு சங்குகள் கொடுக்க நன்றாகப் பேதியாகும், வியாதிகள் அணுகாது. வாரத்திற் கொரு முறை கொடுக்கலாம். பிரதிதினமும் கொடுக்கலாம்.

(தொடரும்.)

திருக்கயிலாய தல விளக்கம்

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம், சென்னை.

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை.

அண்ணல் வீற்றிருக்கப் பெற்றதாதலின்
நண்ணும் மூன்றுல கும்நான் மறைகளும்
எண்ணில் மாதவும் செய்யவந் தெய்திய
புண்ணி யம்திரண் டுள்ளது போல்வது

நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்தளிர் ஆக எழுந்ததோர்
உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை.

— சேக்கிழார்.

சைவ சமயாசாரியர்களால் பாடல் பெற்ற 274 சிவஸ்லங்களுள் முதன்மையானது திருக்கயிலாயம். இது சைவ சமயத்தவர்கட்கு மிக்க முக்கியத்துவம் வாய்ந்த தலம். இதற்குத் திருஞானசம்சந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலிய மூவரும் தேவாரம் பாடியுள்ளனர். 1400 ஆண்டுகட்கு முன்னர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான காரைக்கால் அம்மையார் பேய் உருவத்தோடு தலையாலே நடந்து சென்று கயிலைப் பெருமானைத் தரிசித்து வரம் பெற்றார். 1300 ஆண்டுகட்கு முன்னர் சமயாச்சாரியர்களுள் ஒருவரான திருநாவுக்கரசர், (அப்பர்) காலால் நடந்தும், கையால் தாவியும் மார்பால் நகர்ந்தும், கயிலை மலையானைக் காண இமயமலையில் வெகுதூரம் சென்றார். உடல் உறுப்புக்களெல்லாம் தேய்ந்து செயலற்றுக் கிடந்தார். அப்பொழுது கயிலைப் பரமன் அங்கு ஒரு பொய்கையைத் தோற்றுவித்து அப்பரை அதில் மூழ்கச்செய்து திருவையாற்றில் உள்ள திருக்குளத்தில் எழச்செய்தார். அங்குக் கயிலையில் இருக்கும் தன் திருக்கோலத்தை நாவரசர் தொழுமாறு நயந்தருள் புரிந்தார். 1200 ஆண்டுகட்கு முன்னர்

சுந்தரர், திருவஞ்சைக் களத்திலிருந்தபடியே கயிலை இறைவன் கருணையால் வந்த வெள்ளை யானை மீதிவர்ந்து கயிலைப் பிரானிடம் சென்று தரிசித்துக் கொண்டேயிருக்கிறார்.

முக்கூற்று இமயம்

இந்தியாவின் வடக்கு எல்லையாகவும், இறைவனின் உறைவிடமாகவும் விளங்குவது இமயமலை. இது இறைவனின் உறைவிடம் என்பதற்கு இமாலயம் என்ற சொல்லே சிறந்த சான்று. இமம் என்பது உறைந்த பனி எனவும், பொருள்படும். எனவே பொன்னிறமாகவும், உறைபனியால் மூடப்பட்டதாக வும் இருப்பதால் இது இமயமலை எனப் பெற்றது. இம்மலை, சிறிய மூன்று பிரிவாக அமைந்து, காஷ்மீரம் முதல் அஸ்ஸாம் வரை 1500 மைல் நீண்டுள்ளது. அவற்றுள் பெரிய இமயப் பகுதியில் காஷ்மீரத்தில் அமர்நாத், நேபாளத்தில் பசுபதிநாத், மற்றும் கேதார்நாத், கங்கோத்திரி, யமுனோத்ரி முதலிய புண்ணிய தலங்கள் அமைந்துள்ளன.

மானச சரோருவம்

எல்லைகடந்த இமயப் பகுதியில் திபேத்தைச் சேர்ந்த பிரதேசத்தில் பல புண்ணிய ஸ்தலங்களின் சிகரமெனத் திகழ் வது திருக்கயிலாய மலை. இமய மலையைத் தழுவி அமைந் திருப்பது மானச சரோருவம் என்ற பெரிய ஏரி. இது கடல் மட்டத்திற்கு 15000 அடி உயரத்தில் இருக்கிறது. டிசம்பர் மாதம் பனிப்பாறையாக உறைந்து மே மாதம் நீராக உருகும். இது 50 மைல் சுற்றளவும், 200 சதுர மைல் விஸ்தீரணமும் கொண்டு பசுமையாகக் காட்சி அளிப்பது. கங்கையின் உப நதியான கர்னுலியும், சட்லஜ், சிந்து, பிரம்மபுத்திரா முதலிய நதிகளும் இதன் பக்கத்திலிருந்துதான் உற்பத்தியாகின்றன. அழகிய சிறந்த தாமரை மலர்கள் இதில் மலர்கின்றன. தூய வெண்மையான அன்னப் பறவையை இத்தடாகத்தில் காண லாம். இந்த அன்னம் மீன் உண்பதில்லை. புல், பாசி முதலிய வற்றை உண்ணும் சைவப் பறவையாகவே இருக்கிறது. இத் தடாகத்தினை அம்மையின் சொருபமாகவும், கயிலை மலையைச் சிவபெருமான் சொருபமாகவும் கொண்டு வழிபட்டு வரு கின்றனர்.

கயிலைமலை

கயிலைமலையும், இத்தடாகமும் பலவித வண்ணங்களைத் தோற்றுவித்துக் கொண்டே இருக்கின்றன. மலையில் சிவபெருமானும் பார்வதி தேவியும் வீற்றிருந்து அருள் புரிகின்றனர். இங்குக் கோயில் இல்லை. ஆனல் மண்டபங்களும், பிராகாரங்களும், கர்பக் கிருகங்களுமாகத் திகழும் தென்னாட்டுக் கோயில்களைப்போல் இயல்பாகவே காட்சியளிக்கிறது திருக்கயிலை. பக்குவமுடையவர்கட்கே இக்காட்சி விளங்கித் தோன்றும்.

கயிலை வழிபாடு

இக்கயிலை மலையைச் சுற்றி வலம் வருதலும், அட்டாங்க நமஸ்காரத்தின் மூலம் வணங்கி வணங்கி வலம் வருதலுமே இங்கு வழிபாடாகும். இதனை வலம் வருவதற்கு 28 மைல் ஆகிறது. ஒருமுறை வலம் வருவதற்கு மூன்று அல்லது நான்கு நாள் தேவைப்படும். மலையின் மேற்குப் பிராகாரத்தில் மலையடியில் விபூதிபோன்ற வெண்ணிறமண் கிடைக்கின்றது. இதைத்தான் கைலாசப் பிரசாதமாக எடுத்து வருகின்றனர். வடக்குப் பிராகாரத்தில் டோல்மாவுக்கு வடக்குப் பக்கத்தில் உள்ள சிகரம்தான் குபேரன் இருப்பிடம். இவ்விடத்தில் கௌரி குண்டம் என்ற தீர்த்தம் இருக்கிறது. இது பனிக்கட்டிப் பலகைகளால் மூடப்பட்டிருக்கிறது. இதில் குபேரன் நித்திய கர்மானுட்டானங்களை முடித்துக்கொள்கிருன் என்பர். யாத்திரீகர் இதில் நீராடுவது கடினம். வேண்டுமானல் பனிக்கட்டிப் பலகையை உடைத்துவிட்டு ஒவ்வொருவரையும் அதில் அமிழ்த்தி எடுக்கலாம்.

திபேத்தியர் புராணம்

"திருக்கயிலாயமே உலகம் முழுமைக்கும் தலைமை ஸ்தானம். இம்மலையின் தெய்வமான டேம்சோக், புலித்தோல் உடுத்துக் கபால மாலை அணிந்து ஒருகையில் சூலமும் ஏந்திக் கண்டோ என்ற பெண் தெய்வத்துடன் எழுந்தருளியுள்ளார். இவருடன் 500 போதி சத்துவர்கள் சூழப்புத்தரும் இம்மலையில் வாசம் செய்கிருர். தேவர்கள் இப்பகுதியில் நடமாடுகின்றனர்.

மலேச்சிகரத்தில் வாத்தியங்களின் ஒலி கேட்கின்றது'' என்று திபேத்தியர் புராணம் கூறுகிறது. சைவக் கருத்தினை அப்படியே பௌத்தநூல் கூறுவது போற்றிவர வேற்கத்தக்கதன்றோ!

வழிகள்

கயிலையை அடைவதற்குக் காஷ்மீரத் தலைநகரான ஸ்ரீ நகரிலிருந்து ஒரு பாதையும், சிம்லாவிலிருந்து ஷிப்கி கணவாய் வழியாக ஒரு பாதையும், பத்ரியிலிருந்து மானுக் கணவாய் வழியாக ஒரு பாதையும், ஜோதிமடத்திலிருந்து நிதிக்கணவாய் வழியாக ஒரு பாதையும் கயிலைக்குச் செல்லுகிறது. ஆங்காங்கு உள்ளவர்கட்கு இப்பாதைகள் சௌகரியமானவையே. தென்னாட்டிலிருந்து செல்பவர்கள் அல்மோரா வழியாகச் செல்லுதலே நலம். அல்மோராவிலிருந்தும் ஐந்து வழிகள் செல்கின்றன. 1. லிபுலேக் கணவாய் வழி (16750 அடி உயரம்) 2. தர்மாக் கணவாய் வழி (18500 அடி.) 3. உண்டாதுராக் கணவாய் வழி (17,950 அடி) 4. ஐயந்திக் கணவாய் வழி (18,500 அடி) என்பன அவ்வழிகளாகும், அல்மோராவிலிருந்து கயிலை சுமார் 250 மைலில் இருக்கிறது.

திருக்கயிலாய பரம்பரை

உலகத்தார் போற்ற ஒரு முதலாக விளங்கும் பரமசிவன், பிரம்மனுல் படைக்கப்பட்ட உலகத்துள் திருக்கயிலைமலையில் ஸ்ரீ கண்ட பரமசிவமாகச் சரீரசரீரியாய் எழுந்தருளி, தேவர்கட்கும், மக்கட்கும், ஏனைய உயிர்கட்கும் பக்குவ நிலைக்கேற்ப அருள்புரிந்து வருகிறுர். அப்பெருமானே, சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்ற நால்வருக்கும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை ஞான முத்திரை காட்டி உள்ளவாறு உபதேசித்தவர். உபபேசம் பெற்ற நால்வருள் சனற்குமாரரிடத்துச் சத்தியஞான தரிசனிகளும், அவரிடத்துப் பரஞ்சோதி முனிவரும் உபதேசம் பெற்றனர். ஸ்ரீ கண்ட பரமசிவம் முதல் பரஞ்சோதி முனிவர் வரையுள்ள நால்வரும் அகச்சந்தானகுரவராவர். முழு முதற் பரம்பொருள் எது என்பது பற்றிய குழப்பம் ஏற்பட்ட காலையில் இற்றைக்கு 700 ஆண்டுகட்கு முன்னர்ப் பரஞ்சோதி முனிவர், மெய்கண்ட தேவருக்கு

அவ்வுண்மை நேறியை உபதேசித்தார். அவர் மறைஞான சம்பந்தருக்கு உபதேசித்தார். அவர் அருணந்தி சிவத்திற்கு உபதேசித்தார். அவர் மறைஞான சம்பந்தருக்கு உபதேசித்தார். அவர் உமாபதி சிவத்திற்கும், மச்சுச் சேட்டியாருக்கும் உபதேசித்தார். மச்சுச் சேட்டியாரின் உபதேச பரம்பரையில் வருவது தருமபுர ஆதீனம். உமாபதி சிவனுரின் பரம்பரையில் வருவது திருவாவடுதுறை ஆதீனம். திருக்கயிலே ஸ்ரீ கண்ட பரமசிவம் முதல் இடையருது தோடர்ந்து வழிவழியாக உண்மை நேறியை உபதேசித்து வருவதால் இவ்வாதீனங்கள் திருக் கயிலாய பரம்பரை என்று வழங்கப்பேறுகிறது. மேலும் இவ் வழியில் வந்துள்ள ஆதீனங்கள் பதினுருகும்.

குருமகாசந்நிதானத்தின் யாத்திரை

திருக்கயிலாய பரம்பரையில் வந்துள்ள ஆதீன மகா சந்நிதானங்கள் சமீப காலத்தில் கயிலே யாத்திரை சேன்றதாகத் தேரியவில்லே. நமது குருமகாசந்நிதானமவர்கள் கேதாரநாத் பசுபதிநாத், அமர்நாத் முதலிய இமாலயத் தலங்களேத் தரிசித்த பிறகு கயிலேயையும் தரிசிக்க வேண்டுமேன்று திருவுள்ளம் கோண்டார்கள். அதன்படி 19—6—59 காலே தருமை யிலிருந்து சேன்னேக்கு வந்து 20—6—59 சேன்னேயிலிருந்து காசிக்குச் சேன்று 28—6—59 அங்கிருந்து நைநிட்டாலுக்கு எழுந்தருளினுர்கள். அங்குள்ள 'ஸ்ரீகீதா சங்கத்தின் தலேவர்'' ஸ்ரீஜத் சுவாமி வித்யானந்த சரசுவதி அவர்கள் (20 முறை கயிலேயைத் தரிசித்தவர்) உடன்வர, சில தோண்டர்களுடன் கார்கோட் வழியாகப் பாகேஷ்வர், சோமேஷ்வர், ஜோசேஷ்வர் என்னும் ஸ்தலங்களேத் தரிசித்துக்கோண்டு மிலம் வழியாகக் கயிலேக்கு எழுந்தருளியுள்ளார்கள். சேன்ற திங்கட்கிழமை முதல் கயிலே தரிசனம் கண்டு வலம் வந்துகோண்டிருக் கிருர்கள். சோமவாரம்! கயிலேப்பேருமானுக்கு உகந்த நாளல்லவா? நாமும் கயிலேப் பேருமாணேப் பிரார்த்தனே சேய்வோமாக. குருமகாசந்நிதானம் நலம் உறவும், தோண்டர் கள் நலம் பேறவும், பிரார்த்தனே புரிவோமாக.

நீடு விளங்குக கயிலே ! வாழ்க உலகேலாம் !!

செய்திகள்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

மகாகயிலாய தரிசனம் இனிது நிகழும் பொருட்டுப் பிரார்த்தனை செய்யும் அன்பர்கள் முயற்சியான

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு ஏகதின லக்ஷார்ச்சனை

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தொடங்கிய ஸ்ரீ மகாகயிலாய யாத்திரை இனிது நிகழவேண்டி ஆதீனத் திருமடம், ஆதீன தேவஸ்தானக் கச்சேரி இவற்றின் உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும், ஆதீன ஞானசம்பந்த அச்சகத்தார்களும், ஆதீனக் கல்வி நிலயங்களிலுள்ளவர்களும் மாயூரம் திரு. T. S. தியாகராஜ அய்யரவர்களும், திரு. இராமநாத அய்யர் அவர்களும், மற்றும் பலரும் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்து ஏகதின லக்ஷார்ச்சனை நிகழ்த்தத் திட்டமிட்டனர். அத் திட்டத்தின்படி;

31—8—59 வெள்ளிக்கிழமை யன்று ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேகங்களும் ஆராதனைகளும் செய்விக்கப்பெற்றன. அன்று காலை முதல் ஏகதின தினலக்ஷார்ச்சனை தொடங்கி நடைபெற்றது. இரவு 9 மணிக்குமேல் லக்ஷார்ச்சனை நிறைவுற்றது. வழிபாட்டிற்குத் தருமையாதீனத்திலுள்ளவர்களும், தருமையைச் சூழவுள்ள மாயூரம் முதலிய நகரத்திலிருந்தும், சிற்றூர்களிலிருந்தும் பல பிரமுகர்களும் அன்பர்களும் வந்துதரிசித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் யாத்திரையின் வெற்றிவேண்டிய முழக்கம் திருக்கோயிலெங்கும் நிறைந்திருந்தது. ஸ்ரீமகாலக்ஷ்மி துர்க்காம்பிகை கருணை பெருகிய திருக்கண்களோடு அன்பர்கள் வேண்டியவற்றை அளிக்கும் கருணைக்குறிப்போடு விளங்கினாள்.

கயிலைத் திருப்பதிகப் பாராயணம்

தருமை யாதீனத் தேவார பாடசாலை மாணவர்களும் ஆசிரியரும் திருக்கயிலைத் திருப்பதிகங்களைக் காலை முதல் ஏகதின லக்ஷார்ச்சனை நிறைவு வரை பாராயண வீதி வழுவாது

பாராயணம் செய்தனர். அன்று மாலை 5 மணி அளவில் ஆதீனம் பல்கலைக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் ஸ்ரீ துர்க்காம்பிகையின் சந்நிதியில் முறையாக ஒருவர் சொல்ல மற்றவர் பின் சொல்ல எல்லாப் பதிகங்களையும் பாராயணம் செய்தனர்.

ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி ஆலயத்தில் நாள்தோறும் காலையில் ஆதீனத் தேவார பாடசாலை ஆசிரியர் திரு. வேலாயுத ஓதுவாராலும், மாணவர்களாலும் கோளறு பதிகமும், திருநீலகண்டத் திருப்பதிகமும், மாலையில் திருக்கயிலைத் திருப்பதிகங்களும் முறைப்படி பாராயணம் செய்யப்படுகின்றன. கோளறு பதிகம் கோள்நீக்கத்திற்கும், திருநீலகண்டத் திருப்பதிகம் நோய் முதலியன பற்றுதிருப்பதற்கும் பாராயணம் செய்யப்படுதலை யாவரும் அறிவர்.

கல்லூரி நாட்களில் ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் காலை 9-30 மணி முதல் திருக்கயிலைத் திருப்பதிகப் பாராயணம் ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயிலில் செய்யப்படுகிறது. ஆதீன மடாலயத்தில் திருக்கயிலைத் திருப்பதிகங்களின் ஒலிப்பதிவு காலை மாலை இருவேளைகளிலும் ஒலிபரப்பப்படுகிறது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கயிலைதரிசனம் இனிது நிகழும்பொருட்டு மற்றும் பலர் தங்கள் வழிபாட்டில் திருக்கயிலைத் திருப்பதிகங்களை நாள்தோறும் பாராயணம் புரிந்து வருகின்றனர். சைவத் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும் தன் ஆன்மார்த்த பூஜை முடிவில் அவ்வாறு பாராயணம் புரிந்து வருகின்றார்கள்.

ஆதீன தேவஸ்தானங்களில் சிறப்பு வழிபாடும் பாராயணமும்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் கயிலாய யாத்திரை சிறப்புற நிகழ சிறப்பு வழிபாடும், அர்ச்சனையும் செய்யப்படுகின்றன. மேலும் காலை மாலை இருவேளைகளிலும் திருக்கயிலைத் திருப்பதிகங்கள் முறைப்படி அங்கங்குள்ள கோயில் ஓதுவாமூர்த்திகளால் ஓதப்படுகின்றன.

ஆதீன தேவஸ்தானங்களில் ஆடிப்பூர விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்திற்குச் சொந்தமான வேளுர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வாலாம்பிகை அம்பாளுக்கும், சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருநிலைநாயகி அம்பாளுக்கும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கும் விகாரி ஆண்டு ஆடித்திங்கள் 13 ஆம் நாள் (29—7—59) புதன்கிழமை முதல் ஆடிப்பூர விழா தொடங்கப்பெற்று 22 ஆம் நாள் (7—8—59) வெள்ளிக் கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்போடு நடை பெற்றது. விழா நாட்களில் ஆதீன சமயப் பிரசாரகர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன.

ஜன்ம நக்ஷத்திரவிழாச் சிறப்பு வழிபாடு

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் (திங்கள்தோறும் வரும்) ஜன்மநக்ஷத்திர விழாவைக் குறித்து ஸ்ரீஞானபுரீசுவரர் ஆலயத்தில் ஸ்ரீஞானபுரீசுவரருக்கும், மேலக்குருமூர்த்தம் ஸ்ரீஆனந்தபரவசருக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் 9—8—59 அன்று சிறப்போடு நிகழ்ந்தன. அவ்வழிபாட்டில் திருக்கயிலாய பிரார்த்தனை சிறப்பிடம்பெற்றது. தருமையைச் சார்ந்தவர்கள் எல்லோரும் பங்குகொண்டு வழி பட்டுப் பிரார்த்தித்தனர்.

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

திருக்கயிலைப் பிரார்த்தனைக் கூட்டம்

சென்னை தியாகராய நகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 3—8—59 திங்கட் கிழமை மாலை 6 மணிக்குத் திருக்கயிலைப் பிரார்த்தனைக்கூட்டம் சிவத்திரு. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது· பொதுமக்கள் பலரும் பிரார்த்தனையில் கலந்துகொண்டனர். திருப்புகழ்மணி, திரு. T. M. கிருஷ்ணசாமி

அய்யர் அவர்கள் சிவநாம பஜனை செய்தார்கள். எல்லோரும் அவரைப் பின்தொடர்ந்து சிவநாம பஜனை செய்தார்கள். இடையிடையே சிவநாம மகிமையைப் பற்றியும் திருப்புகழ்மணி விரிவுரை நிகழ்த்தினார்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் எங்கும் பிரகாசமாய் நிறைந்துள்ள இறைவன் பூவுலகத்தில் திருக் கயிலாய மலையைத் தனக்குச் சிறப்பான முறையில் இருப்பிட மாகக் கொண்டுள்ளான் என்றும் திருக்கயிலை இயல்பாகவே கோபுரம், மண்டபம், விமானம் முதலியனவாக அமைந்துள்ளமை யால் இது நன்குதெளிவாகிறது என்றும், இதற்குத்தான் ஸ்ரீகண்ட பரமசிவம் நந்தி யெம்பெருமானுக்கு உபதேசித்தார் என்றும், சனற்குமாரருக்கு உபதேசிக்க அவர் சத்தியஞான தரிசனிக்கு உபதேசிக்க இப்படி பாரம்பர்யமாக உபதேச பரம்பரையில் வந்தவையே திருக்கயிலாய பரம்பரை ஆதீனங்கள் என்றும், அவை பதினெட்டு என்றும், அப் பரம்பரையில் வந்துள்ள நமது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கயிலை சென்று கயிலாய நாதனைத் தரிசித்து நலமாக எழுந்தருளும் பொருட்டாக இப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறுகிறது என்றும், கயிலை நாதனை அவர்கள் தரிசித்து வழிபட்டு வலம் வரும் இச்சமயத் தில் நாம் எல்லோரும் பிரார்த்தனை செய்வதால் நல்ல பலன் உண்டு என்றும் கூறினார்கள்.

திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தமது தலைமையுரை யில் பிராக்ருத கயிலாயம், அப்பிராக்ருத கயிலாயம் எனக் கயிலாயம் இரண்டு உண்டென்றும், இவ்வுடல்கொண்டு காணக் கூடியது பிராக்ருத கைலாயம் என்றும், உயிர் தனியாக நின்று வேறு கருவிகளைத் துணைக்கொள்ளாமல் திருவருளையே துணை யாகக் கொண்டு காண்பது பிரகிருதி சம்பந்தமில்லாத அப் பிராக்ருத கைலாயம் என்றும், பிராக்ருத கைலாயமாகிய திருக் கயிலையைத் தரிசித்தவர்கள் அப் பிராக்ருத கயிலாசத்தையும் தரிசிக்கவல்லவர்கள் என்றும், இக் கயிலையைத் தரிசிப்பதற்கு நிறைந்த தெய்வபக்தியும் திடமான சித்தமும் வேண்டும் என்றும், இத் தகுதி எல்லாம் ஒருங்கு வாய்க்கப்பெற்ற தருமைக் குருமகாசந்நிதானமவர்கள் நமக்கெல்லாம் வழிகாட்டியாக இவ் யாத்திரையை மேற்கொண்டுள்ளார்கள் என்றும், அவர்களது யாத்திரை யாதோரிடையூறுமின்றி நலமாக நிறைவேறக் கயிலாய நாதனைப் பிரார்த்தனை செய்வோமாக என்று பேசினார்கள்.

பிறகு சென்னை ஆட்சிமொழிக் குழுவின் தனி அலுவலர் திரு. கீ. இராமலிங்க முதலியாரவர்கள் திருக்கயிலாயத்தின் மாண்பினைப் பற்றியும், அதனைத் தரிசித்தவர்கள் உடல் வளமும் உயிர் நலமும் பெறும் சிறப்பினைப் பற்றியும் எடுத்துக் கூறினார்கள். முன்னாள் அறநிலைய டிப்டி கமிஷனர் திரு. கணேசம் பிள்ளை அவர்கள் பேசுகையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் தங்கள் ஆதீனத்தைச் சேர்ந்த கோயில்களை மிகவும் புனிதமாக வைத்துள்ளார்கள் என்றும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் வழிபாட்டில் மிக்க ஈடுபாடுடையவர்கள் என்றும், இதனை வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகை யன்று நேரில் கண்டு அனுபவித்தேன் என்றும், இறைவழிபாட்டில் ஈடுபாடும், திடச் சித்தமும் கொண்டுள்ள ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் நல்ல முறையில் யாத்திரையை முடித்துக்கொண்டு நமக்கும் அருள் வழங்குவார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். திரு. ச. சிவகுமாரன் அவர்கள் சுந்தரர், சேரமான் பெருமாள்நாயனார், காரைக்கால் அம்மையார் முதலியோர் கயிலையைத் தரிசித்த முறைமையினைப் பெரியபுராண வாயிலாய் விளக்கினார்கள். மேலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் திரும்பி வரும் பொழுது சென்னை மக்களுக்கு ஒரு நாள் தரிசனம் கொடுக்கும் படியாக நிலையத்தார் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் பொது மக்கள் சார்பாகக் கேட்டுக்கொண்டார்கள்.

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் திருக்கயிலைத் தேவாரம் பற்றிப் பேசும்போது, தேவாரம் பாடியுள்ளவர்களில் சுந்தரர் கயிலை சென்றவர்-அப்பர் கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டவர். திருஞானசம்பந்தர் காளத்தி மலையிலிருந்தே கயிலை மலையானை ஞானக்கண்ணால் கண்டு பாடியவர். இவர்கள் அருளாளர்கள் ஆனதால் அவர்கள் வாக்கின்படியே கயிலைக்காட்சி அளிக்கின்றது. கயிலையின் நிலையைத் தேவாரம் தெளிவாக அறிவிக்கின்றது.

இப்பாடல்களைத் துணையாகக் கொண்டால் கயிலை யாத்திரை எளிதில் கைகூடும். இதனை நன்கறிந்த மகாசந்நிதானமவர்கள் யாத்திரை தொடங்குவதற்கு முன்னர்த் திருவையாற்றிலுள்ள தென்கயிலாயத்திலும், வடகயிலாயத்திலும் இறைவனுக்கு வழிபாடாற்றிக் கயிலாயப் பதிகங்களை அச்சிட்டு வழங்கியுள்ளார்கள். தினமும் பாராயணமாக மேற்கொண்டுள்ளார்கள்.

எல்லோரையும் பாராயணம் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளார்கள். இப்பிரார்த்தனையால் யாத்திரை இனிதே முடியும் என்பதற்கு ஐயமில்லை என உரைத்தார்கள். பிறகு நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் எல்லோரும் பாடி இறை வழிபாட்டில் ஈடு பட்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் யாத்திரை இனிதே நிறை வேறப் பிரார்த்தித்தனர். கயிலாய பரம்பரை வாழ்த்துப்பாட லுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

திரு. P. சுவாமிநாதன் அவர்களும் மாணவ மாணவியர் களும் திருக்கயிலாயத் தேவார பஜனை நிகழ்த்தினார்கள்.

வாழிய குரு பரம்பரை.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தின்

மாதாந்தர சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டவிழா

செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் ஒவ் வோரு ஆங்கில மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளியூர் சென்று சமயப்பிரசாரமும், வழிபாடும் நிகழ்த்துவது என்ற ஷெ சமயப்பிரசார நிலையத் திட்டத்தின்படி, ஜூலை மாதம் 5—7—59 ஞாயிறு காலை 11 மணிக்கு, தொண்டைநாட்டுச் சிவஸ்தலங்களுள் 29 ஆவதாக விளங்கும் திரு அச்சிறுபாக் கத்தில் மாலை 5-30 மணிக்கு வழிபாடும், சென்னை, திருவாளர் கள் ஜி. கலியாணம் பிள்ளை M. A., ச. சிவகுமாரன் M. A., N. R. முருகவேள் M. A. N. T. கிருஷ்ணசாமி B. A., L. T., முதலியவர்களால் சமயப்பிரசாரச் சொற்பொழிவுகளும், நிலையத் திருமுறை வகுப்பு மாணவ மாணவியர்களால் திருமுறைப் பண்ணிசையும் நிகழ்த்தப்பெற்றன.

இந்நிகழ்ச்சியில் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையினரும், சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜனத் தினரும் மேயர் & Co. மாசிலாமணி முதலியாரவர்களும் கலந்து கோண்டார்கள். வழிபாட்டுக் கூட்டம் மிக்க சிறப்போடு நடை பெற்றது.

பாடி என வழங்கும் திருவலிதாயத்தில் சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம்

சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் ஆங்கில மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று வெளியூர்களில் நடைபெற்றுவரும் "மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம்" இம்மாதம் 2-8-59 மாலை $5\frac{1}{2}$ மணிக்குப் பாடி என வழங்கும் திருவலிதாயத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆண்களும் பெண்களுமாக இருநூறு பேர்கட்குமேல் விழாவிற்கு வந்து சிறப்பித்தனர். எல்லோருக்கும் சென்னை மேயர் அண்டு கம்பெனி உரிமையாளர் திரு. மாசிலாமணி முதலியார் அவர்கள் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள். ஷெ கோயில் தர்மகர்த்தாவான திரு. எ. என். பரசுராம் அவர்கள் அனைவரையும் வரவேற்று நல்லமுறையில் சுவாமி தரிசனம் செய்துவைத்தார்கள். அன்று பிரதோஷமானதால் பிரதோஷ கால தரிசனம் மிக்க சிறப்பாக நடைபெற்றது. உடனே பிரதோஷ நாயகரும் புறப்பட்டார். திருக்கூட்டத்து அன்பர்களே சுவாமியை எழுந்தருளச்செய்துவரச் சங்கீதபூஷணம் திரு. பி. சுவாமிநாதன் குழுவினர் தேவார பாராயணம் செய்துவர திருவுலா வந்த காட்சி அனைவர் உள்ளத்திலும் பக்தியைப் பெருக்கியது.

பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் திரு. ஏ. என். பரசுராம், எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆயிரம் ஆண்டுக்குள் எத்தனையோ ஆட்சிகள் வந்து மறைந்தன. அரசர்கள் மறைந்தனர். அவர்தம் மாளிகைகள் மறைந்தன' ஆனால் 1300 ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றி அருள்நெறி பரப்பிய ஞானசம்பந்தர், நாவுக்கரசர் முதலியவர்களின் அருளாட்சியும், கோயில்களும், அடியவர்களின் புகழும் இன்றும் மறையவில்லை. இனி என்றும் மறைய இயலாது. இதுதான் தெய்வத் தொண்டின் சிறப்பு என்று தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார். பிறகு ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் பேசுகையில், வழிபாட்டின் அவசியத்தையும், கூட்டத்தின் நோக்கத்தையும் விளக்கிச் சமயாசாரியர்களின் பாடல்பெற்ற தலங்கட்கு உள்ள தனிச்சிறப்பை எடுத்துக் கூறினார்கள். அடுத்துப் பேசிய திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் இன்றைய சமுதாயச் சூழ்நிலையை நோக்கும்போழுது மிக்க

பயங்கரமாக இருக்கிறது. அரசாங்கம் நிலையான கொள்கை யுடையதாயில்லை. கிறித்தவர்கள் மதமாற்றம் செய்து குழப் பத்தை உண்டுபண்ணுகின்றனர். எனவே இந்துக்களாகிய நாம் ஒன்றுகூடி இறைவனிடம் வழிபட்டு நல்வாழ்வருள வேண்ட வேண்டும். நமது இந்து மதத்தை இம்மாதிரி பிரசார வாயிலாக அனைவருக்கும் தெளிவாகக் கூறவேண்டும் என உரைத்தார்கள். திரு. ச. சிவகுமாரன் அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறுகை யில் அடுத்துவரும் செப்டம்பர் மாதம் முதல் ஞாயிறன்று விநாயக சதுர்த்தி வருவதால் அடுத்தமாதம் மட்டும் இரண் டாவது ஞாயிற்றுக்கிழமை 13-9-59 அன்று மாலை 5½ மணிக்கு திருவள்ளுருக்குச் சமீபத்தில் உள்ள "திருப்பாசூரில் சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம்" நடைபெறும் என்று அறிவித் தார்கள். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. பி. சுவாமி நாதன் அவர்கள் அவ்வூர்த் தேவாரப் பதிகத்தினைச் சுவாமி சந்நிதியில் இசையுடன் பாடி எல்லோரையும் இறைவழிபாட்டில் ஈடுபடுத்தினார்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் நிறைவுற்றது.

திருவாரூரும் திருத்தொண்டும்

திருவாரூர் திருத்தலத்தில் அறுபத்துமூவர் உற்சவம், நடத்த வேண்டும் என்றும் அப்போது சுந்தரர், பரவையார் திருமணம் நடத்தவேண்டும் என்றும் சென்னை அறநிலையத்துறை ஆணையர் உயர்திரு. A. உத்தண்டராம பிள்ளை அவர்கள் ஒரு சமயம் அபிப்ராயப்பட்டார்கள். அதற்கிணங்க திருவாரூர் ஸ்ரீதியாகராஜ சுவாமி ஆலயத்தில் புதிதாகச் செய்யவேண்டியதாகவிருந்த நாயன்மார் திருவுருவங்களும் பரவைநாச்சியார் திருவுருவமும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம் திருவாரூர் இராஜன்கட்டளையில் நிர்மாணிக்கப் பெற்றது. 7—8—59உ அன்று வெள்ளிக்கிழமை சென்னை மாகாண அறநிலையத்துறை ஆணையர் உயர்திரு. A. உத்தண்டராம பிள்ளை B. A., B. L., I. A. S. அவர்கள், தஞ்சை அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீ சோமசுந்தர தேசிகர் M. A., அவர்கள், ஸ்ரீ சக்கரை சேர்வை B. A., B. L., அவர்கள், திருவாரூர் பெருநிலக்கிழார் உள்துறை கட்டளை டிரஸ்டி ஸ்ரீ V. S. தியாகராஜ முதலியார் அவர்கள் மற்றும் ஆரூர்வாசிகளும் இராஜன்கட்டளைக்கு விஜயம் செய்தார்கள். அதுகாலை திருவாரூர் இராஜன்கட்டளை விசாரணை

வித்துவான், ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஆணையருக்கும், உள்துறை டிரஸ்டிக்கும் மாலையிட்டு அனைவரையும் வரவேற்றார்கள். புதிதாகச் செய்த 27 திருவுருவ விக்ரகங்களைக் கமிஷ்ணர் முதலாக, வந்திருந்த அனைவரும் திருக்கரத்தில் தாங்கி ஹர ஹர முழக்கத்துடன் ஓதுவார்கள் திருத்தொண்டத்தொகை பாட இராஜன்கட்டளையிலிருந்து ஸ்ரீ தியாகேசர் ஆலயம் இராஜ நாராயணன் மண்டபத்திற்கு எழுந்தருளச்செய்யப்பட்டது.

8–8–59உ அன்று கமிஷ்ணர் மற்ற பிரமுகர்கள் முதலியவர்களின் முன்னிலையில் திருமணம் சிறப்பாக நடந்து இரவு கோலாகலகாட்சியாக அறுபத்துமூன்று நாயன்மார்களின் வீதியுலா நடந்தது. இதுவரை கண்டறியாத காக்ஷியாக அமைந்திருந்தது.

சீகாழியில் சிறப்பு வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில், தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பரிவாரங்களுடன் எழுந்தருளியிருக்கும் மகாகயிலாயமலைத் தரிசனம் இனிது நடைபெறும் பொருட்டு விசேஷ அபிஷேக ஆராதனைகள் காலை 9–8–59 அன்று 6 மணி முதல் தொடங்கி, நண்பகல் 12 மணியளவில் நிறைவுற்றன. சுவாமி, அம்பாள், திருஞானசம்பந்தர் ஆகிய மூர்த்திகளுக்கு ருத்ராபிஷேகமும், ஸ்ரீ பிரமபுரீசுவரருக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீதிருநிலைநாயகி அம்பாளுக்கு நவசக்தி அருச்சனையும் மிக்க சிறப்போடு நடைபெற்றன,

மாலை 6 மணிக்குத் திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் ஆதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் செஞ்சொற் கொண்டல். வித்துவான், திரு. சோ. சிங்காரவேலனார் அவர்கள் திருக்கயிலையும் திருமுறையும் என்ற பொருள்பற்றிச் சிறந்த முறையில் சொற்பொழிவாற்றினார்கள்.

தேவஸ்தான ஓதுவாமூர்த்தியாகிய திரு. சா. திருஞானசம்பந்தம் அவர்கள் திருக்கயிலைப் பதிகங்களைப் பண்முறையோடு பாராயணம் செய்தனர். வழிபாட்டில் சீகாழியில் உள்ள பிரமுகர்களும், மற்றவர்களும் வந்து கலந்துகொண்டனர். ஆதீன தேவஸ்தான அலுவலர்கள் அனைவரும் வழிபாட்டில் பங்குகொண்டனர்.

பன்னிரு திருமுறை மன்றம், மதுரை.

திருக்கயிலைப் பிரார்த்தனைக் கூட்டம்

செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் நமது தருமை ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருக்கயிலாய தரிசனத்தின் பொருட்டுத் திருக்கயிலைமலைக்கு யாத்திரையாக எழுந்தருளி யிருப்பதை முன்னிட்டு உலக நலம் கருதி 10—8—59 திங்கட்கிழமை யன்று மதுரை பன்னிரு திருமுறை மன்றத்தின் சார்பாக "திருக்கயிலைப் பிரார்த்தனைக் கூட்டம்" வடக்காடி வீதி கூட்டு வழிபாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அன்று ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரருக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது.

"சிவதர்ம பாஸ்கர" சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர் அவர்களும் (மன்றத்தலைவர்.) திரு, A. சிதம்பர முதலியார் M.L.C. அவர்களும் (தருமகர்த்தா, மதுரை வகையரு தேவஸ்தானம்,) திரு. T. தோத்தாத்ரி ஐயங்கார் M. A. அவர்களும் (பிரின்ஸ் பால், மதுரைக் கல்லூரி, மதுரை.) திரு. S. தருமலிங்க முதலியார் அவர்களும் (முன்னைய மாநில உழவுத்துறை துணை இயக்குநர், மன்றத் துணைத் தலைவர்,) பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர். "திருப்பாவை ரத்நு" திருமதி. ராஜம்மாள் சுந்தரராஜன் அவர்கள் குழுவினரால் "சிவநாம பஜனையும்" 'தேவாரமணி" திரு. சைலப்ப ஓதுவார் குழுவினரால் 'திருக்கயிலாயத் தேவார பாராயணமும்" நிகழ்த்தப்பெற்றன.

EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil.

A temple, that suggests a clean life.

(Sd) V. M. Raghupathi,
Regional Inspector of Physical Education,
Tanjore & Ramnad, 13—7—59.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே, முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(விகாரி௵ ஆவணிமீ 1௳ முதல் 31௳ முடிய)
(17—8—59 முதல் 16—9—59 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி நான்கு பாதங்களும் சுபாசுபங்கள் மிசிரமாயும், வரவு செலவுகள் சமமாகவும் இருக்கும். பரணி முதல் பாதம் விசேஷ சௌக்கியத்தையும், கிரஹ சுகத்தையும் தரும். பரணி நான்காம் பாதமும், கார்த்திகை முதல் பாதமும் சஞ்சார பலனையும், வியவகாரத்தையும் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீரிஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் பூர்வீக தன நஷ்டத்தையும், தொழில் பங்கத்தையும் காட்டும். ரோஹிணி நான்கு பாதங்களும் வீண் அலைச்சல்களையும், நினையாத சாதிக்க முடியாத காரியங்களில் ஈடுபடச்செய்து புத்திரியால் சிரமத்தையும் தரும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் செய்நன்றி மறத்தலையும், தெய்வீகத்தன்மை மறைவையும், கலக்கத்தையும் உண்டு பண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் சுபமாகும். தொழில் ஓங்கும். லாபமுண்டாகும். திருவாதிரை நான்கு பாதங்களும் கிரஹணத்தி லிருந்து விடுபட்ட சந்திரனைப்போல் பிரகாசிக்கும். மேலோர் பரியோர் அன்பு கிட்டும். புனர்பூசம் முதல் பாதம் பேரிய

ஆபத்துக்களையும், துர்புத்திகளையும், குடும்பக் கஷ்டங்களையும் கொடுக்கும். புனர்பூசம் 2, 3 பாதங்கள் ஜெயத்தையும், தெய்வ சக்திகளையும், அசாத்தியமெல்லாம் சுலப சாதனங்களாகச் செய்தும், மகா புண்ணிய பலன்களையும் தரும். கீர்த்தி ஓங்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் நாலாம் பாதம் சுப சந்தோஷங்களைத் தரும். வித்தியாபிவிருத்தியாகும். ஆரோக்கியம் உண்டாகும். பூசம் நான்கு பாதங்களும், ஆயில்யம் நான்கு பாதங்களும் யதேச்சாதிகார கௌரவத்தையும், விசேஷ கவுரவ பட்டங்களையும், விவசாய தான்யாபிவிருத்திகளையும் தரும். கீர்த்தி ஓங்கும். சரீரத்தில் உஷ்ண பீடைகளைக் காட்டும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

மகம் நான்கு பாதங்களும் சுபமாகவே நடக்கும். நஷ்டமான பொருள் வரவு ஏற்படும். பூரம் நான்கு பாதங்களும் குடும்பத் தொல்லைகளையும், ஆரோக்கியக் குறைவையும் தரும். உத்திரம் முதல் பாதம் வியாபாரப் பெருக்கு, தொழில் மூலம் இடம் மாற்றம், பந்து மித்திர சேர்க்கை முதலியவற்றைத் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾, ஹஸ்தம் - சித்திரை ½

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் தொழில் விருத்தியைத் தரும். எதிர்பாராத லாபம் உண்டாகும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் சுபமாகவே நடக்கும். நஷ்டமான பொருள் வரவும், சுகவாசமும், பூர்ணமான தெய்வ சக்தியும், உலகப் பிரசித்தமும், ஆரோக்கியமும் உண்டு பண்ணும். சித்திரை 1, 2 பாதங்கள் மங்கள காரியங்களையும், நூதன வஸ்திராபரண லாபங்களையும் தரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்களும் கடன் தொல்லைகளையும் தொழில் பங்கத்தையும் தரும். சுவாதி நான்கு பாதங்களும் தெய்வ பலத்தோடும், கீர்த்திப்பிரதாபத்தோடும், சஞ்சார பலத்தோடும் சுபத்தைத் தரும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் மிச்ரமாய் நடக்கும். மனக்கவலையும், தொல்லையும் அதிகமாகும். வ்யாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4ம் பாதம் வீண் அலைச்சலையும், கவலையையும் உண்டுபண்ணும். எதிலும் நஷ்டம் காட்டும். அனுஷம் நான்கு பாதங்களும் தூரப்பிரயாணத்தையும், காரியங்களில் தவக்கத்தை யும், மனச்சோர்வையும் உண்டுபண்ணும். கேட்டை நான்கு பாதங்களும் சுபத்தைத் தரும். தொல்லைகள் அதிகமாகும். கவலை காட்டும். ஆனாலும், சுபத்தையே தரும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் அரண்யவாசம்போல் இருக்கும்; மனச்சாந்தி இராது. பூரடம் நான்கு பாதங்கள் செலவினங்கள் அதிகமாகும். மேலோர், பெரியோர் அன்பு கிட்டும். புத்திராதி களால் சுகமும், கீர்த்தியும் உண்டாகும். உத்திராடம் முதற் பாதம் ஆரோக்கியத்தைத் தரும். குடும்ப சுகம் ஏற்படும். நஷ்டமான தொழில் கிட்டும். தெய்வபலம் பிரகாசிக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் வீண் அலைச்சலையும், நஷ்டகரத்தையும், விக்னங்களையும் உண்டுபண்ணும். திரு வோணம் நான்கு பாதங்களும், உத்தியோக லாபத்தையும், குடும்ப சௌக்கியத்தையும், மேலோர், பெரியோர் அன்பையும் அளிக்கும். அவிட்டம் 1, 2 பாதங்களும், உத்தியோகத்தில் வெற்றி, வியாபாரப் பெருக்கம், குடும்ப சுகம் முதலியன உண் டாக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் புத்திராபிவிருத்தியையும், சுப சந்தோஷங்களையும் உண்டாக்கும். சதயம் நான்கு பாதங்களும், மேல்ப்பதவியிலிருந்து கீழ்பதவியையும், எவற்றிலும் அபஜயத்தையும் கொடுக்கும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் சுப சந்தோஷத்தையும், குடும்ப சௌக்யத்தையும் ஆரோக்யத்தையும் உண்டுபண்ணும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி ஒன்பது பாதங்களும் சுபமாகவே நடக்கும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். தெய்வபலம் தோன்றும். புதன். வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதம் உலகில் சாந்தி நிலவச் செய்யும். அமைதி ஓங்கும். தான்யவிருத்தி ஓங்கும். ஈதி பாதைகளால் சிற்சில இடங்களில் நஷ்டமேற்படும். நாஸ்தீகர்களும் ஆஸ்தீகத்தைத்தழுவ முயலுவார்கள். ஆனாலும், அவர்களுக்குத் துன்பத்தையேதரும். தேன்தேசம் செழிக்கும் தெய்வ பக்தர்கள் ரக்ஷிக்கப்படுவார்கள்.

ஞானசம்பந்தம் ஆண்டுக் கட்டணம் ரூ. 1 — 50

[சந்தாதாரர்களுக்கு]

புதிய சந்தாதாரர்களாகச் சேர்பவர்கள் புதிய சந்தா என்பதோடு தங்களின் முகவரியையும் தெளிவாக மணியார்டர் கூப்பனில் எழுதவேண்டும். பழைய சந்தாதாரர் புதிய ஆண்டுக்குப் பணம் அனுப்பும்போது பழைய சந்தா என்று குறித்தல் வேண்டும்.

ஏதேனும் விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் பதில் எழுதுவதற்குப் போதுமான தபால் பில்லை அனுப்புதல் வேண்டும்,

முகவரி :— செயலாளர், " ஞானசம்பந்தம் " காரியாலயம்,
தருமபுர ஆதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின்
(வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்) மாதாந்திர வழிபாட்டுக் கூட்டம்

7—6—59 மாலை திருவேற்காட்டில் பிரசாரத்திலும் வழிபாட்டிலும்
பங்குகொண்டவர்களில் ஒரு பகுதியினர்,

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின்
(வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்) மாதாந்திர வழிபாட்டுக் கூட்டம்



திருவேற்காடு ஸ்ரீ திருவேற்காட்டுநாதர் விமானம் (கெஜப்பிரஷ்ட விமானம்)

வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு ஏகதின லக்ஷார்ச்சனை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருக்கயிலாய தரிசனமும், யாத்திரையும் இனிது நிறைவுறப் பிரார்த்தனையும், வழிபாடாக, ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு 11—8—59 செவ்வாய்க்கிழமை ஏகதின லக்ஷார்ச்சனையும், விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சிறப்புற நிகழும். லக்ஷார்ச்சனை காலையில் தொடங்கி இரவு நிறைவேறும். மாலை 6 மணிக்குத் தருமையாதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம், சித்தாந்த சிரோமணி, மதுரகவி, முதுபெரும் புலவர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் (பிரின்ஸிபால், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) " திருக்கயிலையும் திருமுறையும் " என்ற பொருள்பற்றிப் பேசுவார்கள்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலையச்சார்பில்

" மாதாந்தர சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டு விழா "

சமயப்பிரசார நிலையத்தின் சார்பில் ஒவ்வொரு ஆங்கில மாதந்தோறும் முதல் ஞாயிறன்று நிகழும் வழிபாட்டுக் கூட்டம் செப்டம்பர் மாதம் முதல் ஞாயிறு விநாயகர் சதுர்த்தி வருவதால் இரண்டாவது ஞாயிறு 13—9—59 காலை 11 மணிக்கு பூண்டி நீர்த்தேக்கத்தின் சமீபமுள்ள "திருவேண்பாக்கத்தில்" வழிபாடும், மாலை 5½ மணிக்குத் திருவள்ளூர் சமீபமுள்ள "திருப்பாசூரில்" வழிபாடும் சமயப்பிரசாரக் கூட்டமும் நடைபெறும். சென்னை, சைவ சித்தாந்த சமாஜத்தினரும், பால சுப்பிரமணிய பக்த ஜன சபையினரும் பிரசாரக் குழுவினருடன் கலந்துகொள்வார்கள்.

திருச்செந்தூர்த் திருப்புகழ்

திருச்செந்தூர் மிகப்பழைமையான திருநகர். திருச்சீரலைவாய் என்பதும் இத் தலத்தின் மறுபெயர். ஆறுபடை வீடுகளில் முருகனுக்குச் சிறந்த தலம் இதுவே. தெய்வத் திருத்தலமாகிய திருச்செந்தூர்த் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் 8—7—59 புதன்கிழமை யன்று நிகழ்ந்தது. இவ் விழா நினைவாகத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பெருங்கருணையால் திருச்செந்தூர்த் " திருப்புகழ்த் திரட்டு " என்ற நூல் வெளியிடப்பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.

மதிப்புரை

பதிற்றுப்பத்து (ஆராய்ச்சியுரை)

இரண்டாம்பத்து - ஆசிரியர்: பண்டிதர், சு. அருளம்பலம் அவர்கள், விற்பனை உரிமையாளர்: திரு. சிவானந்தநாதன், காரைநகர், இலங்கை, விலை ரூ. 2—00. பக்கங்கள் 216.

சங்கப் பனுவல்களில் மிகவும் பழையதென வல்லுநரால் மதித்துப் போற்றப்பெறும் பெரும் புகழ்வாய்ந்த நூல் பதிற்றுப்பத்து ஆகும். இதன்கண் முதற் பத்தும் இறுதிப் பத்தும் நீங்கலாகப் பிற பத்துக்கள் அனைத்தும் டாக்டர், திரு. உ. வே. சாமிநாத ஐயர் அவர்களால் பழைய உரையோடு வெளியிடப் பெற்றுள்ளன. நம் ஆதீனப் புலவர் திரு. ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்ற புத்துரையும் இந்நூற்கு ஒன்று உண்டு. தேர்ந்த புலமையும், அழுத்தமான இலக்கண அறிவும், வாய்ந்த தமிழ்ப் புலவர் திருவாளர். சு. அருளம்பலவனார் அவர்களால் இரண்டாம் பத்துக்கு இப்போது ஒரு புதிய ஆராய்ச்சியுரை எழுதப்பெற்று வெளிவந்துள்ளது. சங்க நூற்கல்வி குறைந்திருக்கும் இக்காலத்து இஃது ஓர் இனிய பேறு. தமிழுலகிற்கு ஓர் இனிய வரம் இவ்வுரை. இவ்வுரையாசிரியரே ஏனைய பத்துக்களுக்கும் தம் நுண்மாண் நுழைபுலத்தால் உரைவிரிப்பாராயின் தமிழுலகு நற்பயன் பெறும். அந்நாள் விரைகவெனத் தமிழ்த்தாய் திருவடி பரவுவோம். இந்நூல் முழுதுமே ஆசிரியரின் புலமையை விளக்கும்.

மருமக்கள் தாயமுறை தமிழ்மரபன்று என்று முடிவுகூறி, 'வேற்று நாட்டிலிருந்தே தமிழகத்தில் சேர நாட்டிலே புகுந்திருக்க வேண்டுமென்பது துணிபாகும்' என எழுதுகின்றனர் இவ்வுரையாசிரியர். தமிழ்ப் புலவர்களுக்கும். தமிழாராய்ச்சி புரியும் மாணவர்க்கும் இந்நூல் விருந்து. காலத்திற்கேற்றவாறு பரந்த புலமை வளர்க்கும் ஒரு அறிவுக்கூடமாக இவ்வுரை நூலை ஆக்கியுள்ளார் திருவாளர், சு, அருளம்பலம் அவர்கள். 'நவில்தோறும் நூல் நயங்கள் அனைத்தும் இந்நூலில் உள்ளன. தமிழ் மக்கள் அனைவரும் வாங்கிப் படித்துப் பயனெய்த வேண்டுகிறோம், ஆசிரியரிடமிருந்து மேலும் இத்தகைய பல நூல்கள் எழுந்து தமிழுலகுக்குப் பயன் விளைப்பனவாக!

— சோ. சிங்காரவேலனார்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—8—59.